விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 30 வெள்ளிக்கிழமை (12.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 55

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# அமெரிக்கா, நோர்வேயின் உதவியுடன் இராணுவப்புரட்சிக்கு பொன்சேகா சதி


## 5 வருட சிறைத்தண்டனை கிடைக்கும்-கோத்தபாய செவ்வி



(கொழும்பு)

அமெரிக்கா மற்றும் நோர்வேயின் உதவியுடன் இலங்கையில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்த ஜெனரல் சரத் பொன்சேகா முற்பட் டிருந்தார். இதற்காக இவருக்கு இராணுவ நீதிமன்றம் மூலம் 5 வருட சிறைத் தண்டனை விதிக்கப்படும் வாய்ப்புள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



## கோத்தபாயவின் குற்றச்சாட்டு அமெரிக்கா, நோர்வே மறுப்பு

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்திற்கு அமெரிக்காவும், நோர்வேயும் நிதி உதவி வழங்கியதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்தை இரண்டு நாடுகளும் மறுத்துள்ளன.

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை மேற்கோள்காட்டி சிங்கப்பூர் ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் பத்திரிகையில் வெளியான தகவல்களை முற்றுமுழுதாக நிராகரிப்பதாக நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது.

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் நோர்வே இந்த மறுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளது. எந்தவொரு நாட்டின் உள்விவகாரங்களிலும் நோர்வே

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் மரணச் சான்றிதழை வழங்குவதில் சட்டச் சிக்கல்-இலங்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனின் மரணம் தொடர்பான ஆவணங்களை இந்தியாவிடம் வழங்குவதற்கு பல்வேறு சட்ட நடைமுறைகளைக் கடைபிடிக்க வேண்டியுள்ளது.

அவரது மரணச்சான்றிதழை வழங்குவதற்கு பல நடைமுறைகளையும், கால அவகாசமும் தேவைப்படும் என்று இலங்கை கூறியுள்ளது.

முள்ளிவாய்க்காலில் நடந்த மோதலில் பிரபாகரன் சுட்டுக்கொல்லப்பட்டதாக இலங்கை கூறியது. பிரபாகரன் மரணமடைந்து விட்டார் என்றால் அதற்கான இறப்புச்சான்றிதழை வழங்குமாறு சி.பி.ஐ. இலங்கையிடம் கோரியது. இந்தியாவின்

(15ஆம் பக்கம் பார்க்க)

## யானைச் சின்னத்தில் ஐ.தே.க. போட்டியிடும்

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் யானை சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக ஐக்கியதேசியக்கட்சி நேற்று அறிவித்துள்ளது. இது தொடர்பில் அக் கட்சியின் உறுப்பினர் கஜந்த கருணாதிலக தெரிவித்துள்ளதாவது,

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி யானை சின்னத்தில் போட்டியிடுவதென

(15ஆம் பக்கம் பார்க்க)

## ஆளுங்கட்சியின் சார்பில் போட்டியிட யாழிலிருந்து 25 பேருக்கு அழைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடவென யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 25க்கும் அதிகமானவர்கள் நேற்று அவசர அவசரமாக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் மாலை இவர்களுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷ மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் தலைமையில் இவர்களுடனான சந்திப்பு நடைபெறுவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் நீதித்துறை மற்றும் சட்டத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களே இவ்வாறு அவசரமாக அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும்

(15ஆம் பக்கம் பார்க்க)

## எனது கணவரின் பாதுகாப்புக்காக என்னையும் கைது செய்யுங்கள்

### அனோமா பொன்சேகா கேட்கிறார்

(கொழும்பு)

எந்த வசதிகளும் இல்லாமல் தனியறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் எனது கணவரின் பாதுகாப்புக்காக என்னையும் கைது செய்து அழைத்துச் செல்லுங்கள் என ஜெனரல் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா கண்ணீருடன் தெரிவித்தார்.

இராணுவ சட்டங்களை மீறிய குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவை பார்பதற்கு அவரது மனைவிக்கு அரசாங்கம் அனுமதி அளித்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிள் மின்கம்பத்தில் மோதியதில் இளைஞன் பலி; கொக்குவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதுண்டதில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

மற்றொரு இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றிரவு 8.15 மணியள வில் கொக்குவில் பொற்பதி வீதியில் இடம் பெற்றுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)



## மூன்று ஆண்டுகளில் வடக்கு பாரிய அபிவிருத்தியை அடையும்

### மத்திய வங்கி ஆளுநர் யாழில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணம் எதிர்வரும் 3 ஆண்டுகளில் பாரிய அபிவிருத்தியை அடையும் என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

இதற்காக அரசாங்கம் 295 பில்லியன் ரூபாய் (2.7 பில்லியன் அமெரிக்க டொலர் கள்) நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் எச்.எஸ்.பி.சி.(HSBC) வங்கியின்கிளையைதிறந்து வைப்பதற்காக நேற்று யாழிற்கு விஜ யம் செய்த மத்திய

(15ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் போர்க்குற்றம் ஐ.நா. விசாரணை நடத்தும்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் வன்னியில் மேற்கொண்ட யுத்தக் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை எதிர் வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை இந்த விசாரணையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை

(16ஆம் பக்கம் பார்க்க)

## மெய்வல்லுநர் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரியின் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் ஏ.கைலாசபிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக மாகாணக்கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பகுதிப் பொறியியலாளர் கே.சிவபாலன் கலந்து கொள்ளவுள்ளார். (ந-3)

✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

. யாழ். புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம், சிறப்பு விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக்கிளை முகாமையாளர் சி.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-9)

✦ ✦ ✦

(சித்தன்கேணி)

சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நா.ஜெயராணி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு பிரதம அதிதியாகவும் யாழ். மாவட்டச் செயலக சமூக சேவைகள் அமைச்சின் அபிவிருத்தி உதவியாளர் பா.ஸ்ரீபவன் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-49)

## கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கு

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் பட்டமேற் கல்வி டிப்ளோமா 2009/2010 கல்வியாண்டுக்கான மாணவர்களை கற்பித்தல் பயிற்சிக் கட்டம் 2 தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு நாளை காலை 9.00 மணிக்கு யாழ் பிராந்திய த்திற்குத் தவறாது சமூகம் தருமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந-9)


கோழிக்குஞ்சு விற்பனைக்கு

- புறொயிலர் வகை சேவல் குஞ்சுகள்
- மாஸ் அவசியமில்லை
- கூட்டில் வளர்க்க வேண்டிய அவசியமில்லை
- 2 1/2 மாதத்தில் 2 kg வரை வளரக்கூடியது
- தொகையாக வாங்குவோருக்கு விசேட கழிவு
- உங்கள் வீடுகளுக்கே விநியோகிக்கப்படும்
- மிகக் குறைந்த விலை

பதிவுகளுக்கு அழையுங்கள்
021 7200616
23, கண்டி வீதி, சாவகச்சேரி
(406)


## மகா சிவராத்திரி நிகழ்வு

(இணுவில்)

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோவில் திருநெறிய தமிழ் மறைக் கழகம் நடத்தும் மகாசிவராத்திரி விழா இன்று மாலை 7 மணிக்கு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபத்தில் ஆசிரியர் ச.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் ந.ஆறுமுகதாஸும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-3)

✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கிழக்கு கண்ணகா ஸ்ரீ பரமேஸ்வரி கண்ணகை அம்மன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இன்று சாமபூசைகளும் நடைபெறவுள்ளன.

இரவு 7.30 மணியளவில் சைவ சமயப் பரீட்சையில் சித்தியடைந்த 300 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளதுடன் கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை அரசடி விநாயகர் ஆலயத்தில் இன்று மகாசிவராத்திரியை முன்னிட்டு பூசைகளும் பெருமான் வீதியுலா வரும் காட்சியும் மேளவாத்தியக் கச்சேரி, வில்லுப் பாட்டு, பாட்டுக்கச்சேரி போன்ற இசை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ந)

✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தின் மகாசிவராத்திரி நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணியில் இருந்து நாளை காலை 6 மணிவரை யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ந-3)

## ஊடகவியலாளர் இருவர் கைது

ஜெனரல் சரத் பொன்சேகா கைதுசெய்யப்பட்டதை கண்டித்து அம்பாறை தெய்யத்தகண்டிய பிரதேசத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை பொலிஸார் தடியடி மேற்கொண்டு கலைத்துள்ளனர்.

இதனை படம் பிடித்த சிரச மற்றும் சுவர்ணவாஹினி ஊடகவியலாளர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டம் நேற்று தெய்யத்தகண்டிய நகரில் நடைபெற்றது. (ந)

## ஆதரவாளர்கள் அமைதியைப் பேண வேண்டும் ஜெனரல் சரத் பொன்சேகா கோரிக்கை

தாம் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆதரவாளர்கள் அமைதியைப் பேண வேண்டுமென ஜெனரல் சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்துள்ளார். ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டதனைத் தொடர்ந்து மோதல்கள் வெடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான மோதல் சம்பவங்களில் ஈடுபடக் கூடாது எனவும் கோரியுள்ளதாக, அவரது பாரியார் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக படைத்தரப்பினர், ஆக்ரோசமான செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளதாக அவரின் பாரியார் தெரிவித்தார். இதேவேளை ஜெனரல் சரத் பொன்சேகாவின் கைது தொடர்பில் பிராந் திய மனித உரிமை அமைப்புக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளன. (ந-13)

## ஜனாதிபதியின் கீழ் ஊடகத்துறை அமைச்சு

இதுவரைகாலமும் அநுரபிரியதர்ஷன யாப்பாவின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த ஊடகத்துறை அமைச்சு நேற்று முதல் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக அரச திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் முக்கிய அமைச்சுக்களான பாதுகாப்பு மற்றும் நிதியமைச்சுக்கள் ஜனாதிபதியின் வசம் இருந்து வந்த போதிலும் தற்போது ஊடகத்துறை அமைச்சும் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. (ந-5)

## மாணவனுக்கு வாள்வெட்டு

நல்லூர் செல்லர் வீதியில் பாடசாலை மாணவர் ஒருவர் இனம் தெரியாதவர்கள் நடத்திய வாள்வெட்டுத்தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 6.30 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில் நல்லூர் செல்லர் வீதியைச் சேர்ந்த எ.சதீஸ் (வயது 19) என்பவரே படுகாயமடைந்துள்ளார். (ந-14)

## இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமை உன்னிப்பாக அவதானிக்கப்படும்

### ஐரோ. ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனரல் பொன்சேகா கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்டு வரும் நிலைமைகளை ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக அதன் துணைத் தலைவரும் பேச்சாளருமான கத்திரீன் அஸ்ரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் பொன்சேகா கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டுவரும் நிலைமைகளை ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பிரிவினைகளைத் தவிர்ப்பதற்கு காத்திரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசு சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதையும் தேர்தலில் போட்டியிட்டவர்கள் மற்றும் அவர்களின் பணியாளர்களின் பாதுகாப்புக்களை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

தமது பிரிவினைகளை கைவிட்டு எல்லா சமூகத்தையும் அரசு ஒன்றிணைக்க வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால் நீண்டகால அமைதியும் பாதுகாப்பும் ஏற்படப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)


யாழ். மண்ணில் புதிய உதயம்

P. K. S. P

ரயர் வேக் சொப் and விற்பனை நிலையம்



எம்மிடம் சகலவிதமான ரயர், ரீயூப், லஸ் ரயர், ரீயூப் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்களையும் மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மற்றும் சகல விதமான ரீயூப், ரீயூப் லஸ் ஒட்டு வேலைகளும் வீல் பலன்ஸ் வேலையும் சிறந்த முறையில் செய்து தரப்படும்.


தொலைபேசி:- 0214921802
0777498793

காலிங்கன் தியேட்டர் முன்பாக
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.

(413)


## மரண அறிவித்தல்

### சுவாமிநாதன் யுகராசன் (தங்கக் கொடி)



சுன்னாகம் தெற்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் யுகராசன் (தங்கக் கொடி) 12.01.2010 அன்று லண்டனில் காலமானார். அவரது இறுதிக் கிரியைகள் இன்று (12.02.2010) வெள்ளிக் கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்
சு.அரசராசன் (அண்ணன்)

(412)


NORTH LANKA IIT உடன்
Direct Lines (Pvt) Ltd
இணைந்து வழங்கும்

Netherlands (Holland) இல்
உடனடி வேலைவாய்ப்பிற்கான
Spot Selection

பின்வரும் வேலைவாய்ப்புகளுக்கு
130 வெற்றிடங்கள் ..........

- Security Supervisors
- Security Guards
- Factory Workers
- Industrial Workers
- Garden Workers

சம்பளம்
மாதம் 1200 யூரோ
- (ரூபா 2 இலட்சம்)

5 Years
Work Permit +Visa

இ ல வ ச
தங்குமிட வசதி
மருத்துவ காப்புறுதி
போக்குவரத்து வசதி

யாழ் வருகைதரவுள்ள
Member of JISCO group
Mr.Ahamed Jiffrey
Chairmen - Direct Lines (Pvt) Ltd
Labor License No - 524
அவர்களால் 14/02/2010 - 10:00 AM
Spot Selection ..........

பதிவு செய்பவர்களுக்கு மட்டும்
13-02-2010 - மாலை 4:00 மணிக்கு முன்பு
கீழ் வரும் முகவரியில் பதிவு செய்யவும்
NORTH LANKA IIT
#113, Laxan Plaza, Navalar Road, Jaffna.
(C-4427)

# இன்று ஒரு தகவல்

## நடுவு நிலைமை

ஓர் ஊரில் ஓர் அழகான இளவரசன் இருந்தான்.

அவன் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்து வந்தான்.

பகல் முழுக்கத் தூங்குவான். இரவு பூரா கும்மாளம். அந்தளவுக்கு உல்லாசமாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

இது ஊர் முழுக்கத் தெரிந்த செய்தி. ஆனால் ஒரு விடயத்தில் அவன் மிகவும் கெட்டிக்காரன்.

அதாவது அவன் ஒரு கிற்றார் கலைஞன். அந்த இசைக் கருவியை அருமையாக வாசிப்பான். இந்த இளவரசனுடைய தேசத்துக்கு ஒரு தடவை புத்தர் வந்திருந்தார்.

புத்தரின் போதனைகளை அவன் இப்பொழுது தான் முதல் தடவையாக கேட்டான்.

உடனே அவருடைய வழிக்கு மாற முடிவு செய்தான். ஆகவே புத்தரை நேரில் சந்தித்தான்.

ஐயா... நான் சந்நியாசி ஆகவேண்டும். எனக்குத் தீட்சை கொடுங்கள்." என்றான்.

"இதோ பாரப்பா... உன்னைப்பற்றி எனக்கு எல்லாம் தெரியும். அதனால் நீ மறுபடியும் யோசித்துப் பார்த்துவிட்டு அதற்குப் பின் சொல்" என்றார்.

இளவரசன் தயங்கினான்.

"நிதானமாக யோசித்துப் பார்த்து விட்டு அதன் பின் வந்து சொல்" என்றார்.

"நான் ஏற்கனவே முடிவு செய்து விட்டேன். அதனால் இப்பவே கொடுங்க" என்றான்.

"நீ சொல்வது சரி. இருந்தாலும் யோசித்துப் பார்ப்பதில் என்ன தப்பு? இதுவரைக்கும் நீ மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்துவிட்டாய். தங்கரதத்தில் பயணம் செய்திருக்கிறாய். பட்டு மெத்தையில் படுத்து தூங்கியிருப்பாய். நினைத்த நேரமெல்லாம் அறுசுவை விருந்து.

இப்படி எல்லா வசதியுடனும் இருந்த நீ ஒரே நாளில் எல்லாவற்றையும் விட்டு விடுகிறேன் என்கிறாயே...

நீ சந்நியாசியாகிவிட்டால் அந்த வசதியெல்லாம் இருக்காது.

அது மட்டுமல்ல. சந்நியாசியான பின் மறுபடியும் இந்த வாழ்க்கைக்குத் திரும்பி வந்தால் எல்லோரும் ஒரு மாதிரியாக பேசுவார்கள்.

அவமானமாக இருக்கும். எதற்கும் பின்னர் யோசித்துச் சொல் என்றார்.

இளவரசன் பிடிவாதமாக இருந்தான்.

சரி என்று சொல்லி புத்தர் அந்த இளவரசனுக்குத் தீட்சை கொடுத்தார்.

அப்பொழுதே அந்த இளவரசன் சந்நியாசி ஆகிவிட்டான்.

சிறிது நாட்களிலேயே எலும்பும் தோலுமாக ஆகிவிட்டான். அடையாளமே தெரியவில்லை.

ஒருநாள் இரவு.

அந்த இளவரசன் இந்தக் கோலத்தில் ஒரு மரத்தடியில் படுத்திருந்தான். இப்பொழுது அவன் இளவரசன் இல்லை. சந்நியாசி.

புத்தர் அந்த நேரத்தில் அவனைத் தேடி வந்தார்.

இரவு நேரத்தில் புத்தர் தம்முடைய சீடர் ஒருவரைத் தேடி வந்தால் அதை மிகப் பெரிய விடயமாகக் கருதுவார்கள்.

புத்தர் அவனை எழுப்பினார்.

அவன் எழுந்து உட்கார்ந்தான்.

"நீ ஓர் அரசன் என்றும் , பெரிய கிற்றார் கலைஞன் என்றும் கேள்விப்பட்டேன் அது உண்மையா? " என்று கேட்டார் புத்தர்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

இதை ஏன் இந்த நேரத்தில் வந்து கேட்கிறார்? என்று யோசித்தான்.

பின்னர் "ஆமாம்" என்றான்.

"சரி இப்போது இரண்டாவது கேள்வியைக் கேட்கிறேன். கிற்றாரின் நரம்புகள் மிகவும் இறுக்கமாக இருந்தால் அதில் சங்கீதம் பிறக்குமா?"

"இறுக்கமாக இருந்தால் அதில் இசை பிறக்காது அறுந்து போகும்"

"சரி. அப்படியானால் அது மிகவும் தளர்வாக இருந்தால் இசை வருமா?"

"வராது. கிற்றாரின் இசை சரியாக வரவேண்டுமானால் அந்தக் கம்பிகள் இறுக்கமாகவும் இருக்கக்கூடாது. தளர்வாகவும் இருக்கக்கூடாது. அது நடுநிலையில் இருக்க வேண்டும்."

இப்போது புத்தர் சொன்னார்.

"நான் சொல்ல வந்ததும் அதுதான்.

நமது வாழ்க்கை இருக்கிறதே ... அது ஓர் இசைக்கருவி மாதிரி இறுக்கமாக இருந்தாலும் இசை பிறக்காது. தளர்வாக இருந்தாலும் இசைபிறக்காது.

வாழ்வின் கம்பிகள் நடுநிலையில் இருக்க வேண்டும்."

இவன் நிமிர்ந்து பார்த்தான்

புத்தர் தொடர்ந்தார்.

"நீ பெரிய கிற்றார் கலைஞன் -வாழ்விலும் நீ பெரிய குருவாக வேண்டும் என்று நான் விரும்புகிறேன் ஓர் எல்லையிலிருந்து மற்றோர் எல்லைக்குப் பாயாதே. செல்வச்சிறப்பிலிருந்து கடுமையான விரதத்துக்குத் தாவாதே!

ஆனந்தத்திலிருந்து சுய சித்திர வதைக்கு எட்டிக் குதிக்காதே நடுவில் நடுநிலையாக நில்.

இது தான் புத்தருடைய உபதேசம்.

"உங்கள் வாழ்வின் எல்லாச் செயல்களிலும் நடுவில் நில்லுங்கள் . அப்போது தியானம் கைகூடும். விடுதலை மார்க்கம் புலப்படும்." என்பது பெரியவர்கள் நமக்குச் சொல்லியிருக்கும் அறிவுரை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## யாழ் மாவட்டப் பாடசாலைகளின்

# குடிநீர், சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை

(அல்வாய்)

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் குடிநீர், சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒவ்வொரு வலயங்களிலும் குடிநீர் வசதிகள் (கிணறு/வெளியிடங்களிலிருந்தான நீர் விநியோகம்) மற்றும் மலசல கூட வசதிகள் ஆகியன முற்றாக இல் லாத பாடசாலைகளின் விபராங் களை வலய ரீதியாக தொகுத்து எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக வ.ஸ்ரீஸ்கந் தராசா ,பிரதிக்கல்விப் பணிப்பாளர் ,மாகாணக் கல்வித்திணைக்களம் வடமாகாணம் , வரோதயா நகர் , திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாணக் கல்விப்ப ணிப்பாளரினால் சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குடிநீர், சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதற்கென ஒவ்வொரு வலயத்திற்கும் 1.02 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக குடிநீர் வசதிகள் , சுகாதார வசதிகளை முற்றாக பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள பாடசாலை மற்றும் முற் றாக சேதமடைந்துள்ள நிலையி லுள்ள பாடசாலைகளின் விபரங்களை தனித்தனியாக விளக்கமாக அறியத் தருமாறு வடமாகாண கல் விப்பணிப்பாளர் வீ. இராசையா கேட்டுள்ளார்.

மேலும் பாடசாலை உணவு செயற்திட்ட அறிக்கைகள் மற்றும் உலக உணவுத்திட்டம் தொடர்பான விப ரங்களை அரச அதிபர் செயலகங்கள் ,வடக்கு மாகாண கல்வி அமைச்சு ஆகியவற்றுக்கு அனுப்பி வைப்பதற்காக மாதாந்த பாடசாலை அறிக்கை படிவங் களும் மாதாந்த கோட்ட அறிக்கை படிவங்களும் அச்சிடப்பட்டு யாழ் உலக உணவுத்திட்டப் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்பாடசாலை உலக உணவு செயற்திட்ட இணைப்பாளர்கள் இப்படிவங்களை உலக உணவுத்திட்ட காரியாலயத்தில் பெற்று அவ்வவ் கோட்டக்கல்வி அதிகாரிகளுடாக பாடசாலைகளுக்கு விநியோகிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார்.

(6-4-19)

## இல்ல தடகள விளையாட்டுப் போட்டி

(அல்வாய்)

வல்வெட்டித்துறை வல்வை மகாவித்தியாலய வருடாந்த இல்ல தடகள விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நெடியக்காடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் வித்தியாலய அதிபர் திருமதி கு. நகுலாம்பிகை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஸ்ணானந்தன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். (6-4-19)

## எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் இடம் பெயர்ந்தோருக்கான வாக்களிப்பு வசதி

2008 ஆம் ஆண்டுக்கான இடாப்பில் தமது பெயர்களையுடையதும் தற்போது இடம்பெயர்ந்து தமக்குரிய வாக்களிப்பு நிலையத் திற்குச் சென்று வாக்களிக்கமுடியாமல் உள்ளவர்களுமான வாக் காளர்களுக்கு எதிர்வரும் பாரர் ளுமன்றத் தேர்தலில் வாக்களிப் பதற்கான ஒழுங்குகள் தேர்தல் கள் ஆணையாளரால் மேற் கொள்ளப்படவுள்ளது.

எனவே பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கவிரும்பும் வாக்காளர்கள் தாங்கள் வசிக்கும் பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து பிரதேச செயலரிடம் தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அல்லது தேர்தல் ஆணையாளர், தேர்தல் செயலகம், இராஜகிரிய என்ற விலாசத்திற்று எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்குமாறு கேட் டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

யாழ்ப்பாணம் மாவட்டவாக்காளர் இடாப்புகளை யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்கள் / உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் பார்வையிட முடியும் என்பதுடன் வெளிமாவட்டத்திலுள்ள வாக்காளர்கள் வெளி மாவட்டங் களுக்கான 2008 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புகளை யாழ்ப்பாணம் மாவட்ட செயலக வளாகத்திலும் பார்வையிடலாம்.

மேலும் இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் வசிக்கும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்குரிய வாக்காளர்கள் அவர்கள் வசிக்கும் பிரதேசத்திலுள்ள மாவட்ட செயலகத்தில் வாக்காளர் இடாப்புக் களை பார்வையிடலாம் எனினும் யாழ் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

(4-6)

## இராசி பலன்

*12-02-2010*

*(தை30, வெள்ளிக்கிழமை)*
*சதுர்த்தசி பின்னிரவு 6.30 மணிவரை*
*உத்தராடம் பிற்பகல் 2.10மணிவரை*
*இராகுகாலம் 11.04-12.34 மணிவரை*
*சுபநேரம் 6.34-8.04 மணிவரை*
*கீரிமலை நகுலேஸ்வரம் , பருத்தித்துறை சித்தி விநாயகர் , துன்னாலை வடக்கு ஆயில் நின்றெல்லைப்பிள்ளையார் தேர்*
*மகா சிவராத்திரி விரதம்.*

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி, புதிய திருப்பம், அதிகாரம். |
| இடபம் | ஆன்றோர் சந்திப்பு, பித்த ரோகம், புதிய திட்டமிடல், திடீர் பயணம். |
| மிதுனம் | பொருள் விரயம், கலகம், காரியதாமதம், அபகீர்த்தி. |
| கடகம் | கீர்த்தி, குடும்ப மகிழ்ச்சி, முயற்சி பலிதம், தெய்வதரிசனம். |
| சிங்கம் | ஆரோக்கிய நிலை, காரிய சித்தி, தெய்வ தரிசனம், நண்பர்கள் சந்திப்பு. |
| கன்னி | அஜீரண ரோகம், காரிய இடையூறு, போசன சுகக் குறைவு, தனவிரயம். |
| துலாம் | மனச் சஞ்சலம், ஆரோக்கியக் குறைவு, தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு. |
| விருச்சிகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், மனோ தைரியம், போசனசுகம், நற்கீர்த்தி. |
| தனுசு | வீண்பகை, மனோசஞ்சலம், முயற்சி தாமதம், தெய்வசிந்தை. |
| மகரம் | தெய்வதரிசனம்,வெகுமானம், முயற்சி தாமதம்,போசன சுகம். |
| கும்பம் | காரிய அலைச்சல்,சயனக் குறைவு, தனவிரயம் , சோம்பல் நிலை. |
| மீனம் | முயற்சி கைகூடும்,தெய்வ தரிசனம்,பொருள் சேர்க்கை, உறவினர் வருகை. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 130 |
| தக்காளி | 130 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 60 | 70 | 80 |
| கரட் | 70 | 80 | 120 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 60 | 70 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 80 |
| பாகற்காய் | 110 | 120 | 130 |
| வெண்டிக்காய் | 90 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 30 |
| பயிற்றங்காய் | 130 | 140 | 120 |
| லீக்ஸ் | 80 | 90 | 80 |
| பீற்றூட் | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 220 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 340 | -- |
| போஞ்சி | 120 | 130 | 120 |
| கத்தரி தம்புள்ள | 30 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 15 |
| தேசிக்காய் | 40 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# சுழிபுரம்–வடகிழக்கு (சோழிபுரம்)
# அருள்மிகு சம்புநாதேஸ்வரபதி சுயம்பு நாதேஸ்வரி சமேத
# சுயம்பு நாதலிங்கேஸ்வரி இரதோற்சவ
# சிறப்பு மலர் - 12.02.2010

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



சிவபூமியென போற்றப்படும் இலங்கையின் யாழ்ப்பாணத்தின் வலி மேற்கு சுழிபுரம் சம்பில் துறைமுகம் என்னும் பண்டைய கல்சார்ந்த இடமும் அதன் மேற்கு திருவடிநிலையென்ற தீர்த்த மகிமையும் வயலும் சூழ்ந்த சிறப்பான சரித்திர புகழ் பெற்ற சுயம்பு நாதேஸ்வரி சமேத சுயம்பு நாதலிங்கேஸ்வரர் ஆலயம் பழமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றாகும்.

மஹோற்சவத்தில் தேர்த் திருவிழா அழித்தலைக் குறிப்பதாகும். எனவே சம்பு நாதேஸ்வரர் இன்று தேரேறி வந்து அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்து அடியவர்களைக் காக்க வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்தித்து அருளாசி வழங்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள்,
ஆதீன முதல்வர் ,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## ஆலய பிரதமகுருவின் ஆசிச்செய்தி

சுழிபுரம் சம்புப்பதி சம்புநாதேஸ்வரப் பெருமான் இ;ன்று ரதம் ஏறும் நன்னாளில் ஆசி கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். தேரின் தோற்றம் சுவாலித்து எரியும் அக்கினியின் தோற்றத்தில் அமைக்கப்பட்ட தேரானது அழித்தலைக் குறிப்பது தேரின் பாகங்கள் பிரபஞ்சத் தோற்றத்தையும் அதன் பீடம் இருதயத்தையும் குறிப்பன. அங்கு இறைவன் வீற்றிருந்ததும் தேர் ஓடுகிறது.வாழ்க்கைத் தேர் சிறப்பாக ஒடுவதற்கு நமது இருதயப் பீடத்திலே இறைவனை எப்போதும் எழுந்தருளவைக்க வேண்டும். தேர்சரியான பாதையில் ஓடுவதற்கு இசைவாகச் சறுக்கும் கட்டைகள் போட்டு அதனைக் கட்டுப்படுத்துவது போல, நமது வாழ்க்கையையும் நல்வழிகளில் நெறிப்படுத்த வேண்டும். மேலே கோபுரம் போல் குவிந்து செல்லும் தேர் கலச முடியில் குடைநிழல் தெரிகிறது. மனம் குவிந்து மேலான சிந்தனையுடன் இறைவனைத் தியானித்தால் அவனது அருட்குடை நிழல் நம்மைத் துயர வெளியிலிருந்து பாதுகாக்கும். தேர்க்காலிலே தேங்காயைச் சிதற அடித்து நமது துன்பதுயரங்களைச் சிதற வைப்பதையும் வலிய தேங்காய் ஓடுபிரிந்து வெண்ணிற உட்பாகம் வெளிப்படச் செய்து மல நீக்கத்தை உருவகப்படுத்துவதையும்இந்தத் தேர்த்திருவிழாவில் காணலாம். தேர் நன்னாளிலே இன்றைய உபயகாரர்கள், சிவன் அடியார்கள், அனைத்து ஜீவராசிகளும் இன்புற்றுவாழ சிவனடி பிரார்த்தித்து வணங்குகின்றேன்.

கிரியாசாகர, சக்தி உபாசகர்,
சிவஸ்ரீ சுந்தரஸ்ரீரங்கநாதக் குருக்கள்
ஆலயப் பிரதமகுரு.

## அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி



வரலாற்றுப் புகழ்மிக்க சுழிபுரம் பதி, நெய்தலும், மருதமும் ஒன்றிப்பிருக்கும் பூர்வீக பிரதேசமாகும். சம்பில் துறைமுகம் என்னும் பண்டைய கல்சார்ந்த இடமும் இப்பிரதேசத்தில் அமைந்துள்ளது. இச் சிறப்பம்சங்களைக் கொண்ட சரித்திரப் புகழ்பெற்ற சுழிபுரத்தில் கீரிமலையைப் போல் மருவியுள்ள திருவடிநிலையிலுள்ள தீர்த்தமாடும் துறையும் சிவன் அடியார்களுக்கும் பாவ விமோசனமளிக்கும் நம்பிக்கை நட்சத்திரங்களாகும். இப்பழமைவாய்ந்த ஆலயத்தில் ஒன்று இங்குள்ள சிவலிங்கப் பெருமானுடைய ஆவுடையாரில் ஐந்து முகங்கள் அமைந்திருப்பது சிறப்பான அம்சமாகும். இத்தகைய இறை நாமம் சூழ்ந்த பகுதியில் அருள்மிகு சம்பு நாதேஸ்வரபதிசுயம்புநாதலிங்கேஸ்வரர் ஆலயத்தில்ஆணவ அழிவை நினைவுறுத்தும் தேர் திரு விழா, மாசிமாத அமாவாசைத் திதியை அந்திமாகக் கொண்டு பத்துத்தினங்கள் மகோற்சவம் நடைபெற்று வருகின் றது. இத்தேர்த் திருவிழாவைக் கருப்பொரு ளாக கொண்டு வெளியிடப்படவுள்ள 2010–சிறப்புமலர் ஆலய, சமய, சமூக வரலாற்று ரீதியான உள்ளடக்கங் களைக் கொண்டு வெளியிடப்படுவது பலருக்கும் பயன் படும் நன்முயற்சியாகும்.

இவ்வாறான சிறப்பம்சங்கள் பொருந்திய இவ்வாலயத்தில் தேர்த் திருவிழா சிறப்புற நடைபெறவும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கும் அருள்மிகு சுயம்பு நாதலிங்கேஸ்வரரின் நல்லாசிகளை வேண்டி எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர்.யாழ். மாவட்டம்.



பாரோர் வினை துடைக்கும்
சம்பு நாதேஸ்வரரின்
தேரூரும் மாட்சி
சீரோங்கு சாத்தா வோலை தெய்வீகப்பதி மேவும்
பாரோர் புகழ் சம்பு நாதேஸ்வரப் பெருமானின்
தேரூரும் காட்சித் திருப் பொலிவு காண்பதற்கு
வாரீர் வடம் பிடித்து வானுலகின் மாண்பு பெற

சிவநேயச் செல்வர்காள்,

சைவமும், தமிழும் செழிப்புற்றோங்கும் சிவபூமியாம் இலங்காத் துவீபத்தின் வடபால் மேற்குப் கரையோரமாய் பூர்வீக கடல்வழித் தொடர்புகளிற்கு அரணாக அமைந்தது சம்பில் துறைமுகம். இதன் வுளம் சேர்க்கும் பதியாகி வழிபாடியற்றிய சம்பு நாதேஸ்வரர் ஆலயம் இந்து சமுத்திரத்திரத்தின் ஆதிக்கத்தால் கடல்கொள்ள கீழ்ப் பாங்கராய் மருதநிலம் சிறந்தோங்கும் சாத்தாவோலைப் பதியில் சம்பு நாதேஸ்வரர் ஆலயம் மீண்டும் அமைக்கப் பெற்று முன்னைய தலைமுறையினரால் பூசிகப்பெற்று வந்தது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த வன்முறைச் சம்பவங்களால் மீண்டும் இவ்வாலயம் சிதைவுற்று நலிவடைந்தது. இதனைக் கண்டு துன்புற்ற அன்பர்கள் ஒன்றுகூடி ஐந்து கோணங்களில் அமைந்த ஓர் ஆலயத்தை புதிதாக அமைத்து ஐந்து திருவதனங்களுடன் அமைந்த சம்பு நாதேஸ்வர லிங்கேஸ்வரப் பெருமானை ஐங்கோண வடிவில் அமைந்த மூலாலயத்தில் பிரதிட்டை செய்து மகா கும்பாபிஷேகப் பெருவிழாவை 2008ஆம் ஆண்டு சிறப்புற நிறைவேற்றினர்.

மருதநிலத் தெய்வமாம் சாத்தா கோயில் கொண்ட பதியாகையினால் சாத்தாவேலை என்ற சிறப்புப் பெயர் பெற்றமையும் சம்பு நாதேஸ்வரரின் பூர்வீகப் பதியாகையின் இதன்பால் பறாளாயில் கோவில் கொண்ட விநாயர், சுப்பிரமணியர்திருநாமங்கள் ஈஸ்வர விநாயகர், சிவசுப்பிரமணியர் என்று போற்றப் பெறுவதும் நோக்கற்பாலது.

இவ்வாலயத்தின் மகோற்சவ விழாவானது மாசிமாத அமாவாசைத் திதியை அந்தமாகக் கொண்டே பத்துத் தினங்களில் நடைபெறுகின்றது. பன்னிரு திருமுறைகள் பாராயணம் செய்தல், மகா சிவராத்திரி காலத்தில் அடியார்கள் மகாலிங்கத்திற்கு அபிடேகம் செய்தல் ஆகியன இவ்வாலயத்தின் சிறப்பிற்குரியன.

இன்று தேரேறி வந்து பாரோர் வினை துடைக்கும் சம்பு நாதேஸ்வரி சமேத சம்பு நாதேஸ்வரப் பெருமானின் திருவருட் பொலிவானது அடியார்கள் மனங்களில் நிறைந்து அல்லலைப் போக்கி வல்வினை கடிந்து வளம் பலசேர்க்கும் இனிய நன்நாள் திரிபுரத்து அரக்கர்களால் துன்புற்ற தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டு ஓர் தேரை அமைத்தனர். தேரேறிய இறைவன் திருப்புன் முறுவலால் திரிபுரங்களையும் தகனம் செய்து அடியவர்களைக் காத்திருளினார் என்ற தெய்வீக வரலாற்றை நினைவுபடுத்துவதாகவே இரதோற்சவம் அமைகின்றது.

தேரேறிவந்து திருவருட் பார்வை நல்கும் சம்பு நாதேஸ்வரப் பெருமானின் திருவருட் பிரவாகம் ஆலயத்தை செவ்வனே வழி நடத்தும் அறங்காவலர்கள், விழாக்காணும் அன்பர்கள், விழா உபயகாரர்கள், சிவநேயச் செல்வர்கள் அனைவருக்கும் பல்கிப் பெருகி வளம் பல நல்க சம்பு நாதேஸ்வரப் பெருமானின் பாத கமலங்கள் பணிந்திறைஞ்சி வாழ்த்துகிறேன். மகோற்வச குருவாக விழாக்களை வழிநடாத்தும் வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சு.சுந்திரராஜ குருக்கள் ஐயா அவர்களின் நல்லாசிகள் எல்லோருக்கும் வளம் சேர்க்க வேண்டி அமைகின்றேன்.

சிவஸ்ரீ சோ.நடராசாக்குருக்கள்
சில்லாலை ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
தேவஸ்தான பிரதமகுரு.

## ஆலய மகோற்சவ குருவின் ஆசிச்செய்தி



சம்புநாதேஸ்வரி சமேத சம்புநாத பெருமானுடைய தேர்உற்சவம் இன்றாகும். மாசி அமாவாசையைத் தீர்த்தமாக கொண்டு பத்து நாள் மகோற்சவமாக நடைபெற்றுவருகின்றன.

யாழ்ப்பாணம் வலிமேற்கு சுழிபுரம் வடகுதியில் சாத்தாவோலை என்னும் பதியிலும் சம்பில்துறை முகம் என்னும் பண்டைய கல்சார்ந்த இடமும் அதன் மேற்கு திருவடி நிலையென்ற தீர்த்த மகிமையும், வயலும் சூழ்ந்த சிறப்பான சரித்திர புகழ் பெற்ற இவ் வாலயமாகும்.

நாட்டின் துன்பகரமான வேளையில் இவ்வாலயம் முற்றாக அழிக்கப்பட்டது. மக்களின் உதவியோடு இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகோற்சவம் நடைபெறுகின்றன. முக்கியமாக இங்குள்ள சிவலிங்கம் பெருமானுடைய ஆவுடையாரில் ஐந்து முகங்கள் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

தேர்த்திருவிழா அழித்தலையும், தீர்த்த திருவிழா அருளலையும், மௌனோற்சவம் மறைத்தலையும் குறிக்கும். முப்புரம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலமும் அத்திரிபுரங்களை நீறாக்கி தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி, என்னும் மூவர்களையும் தேவர்களையும் தம்பதம் அருளி விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களுக்கு திருவடி முத்திகொடுத்தமை தேர் உற்சவ தத்துவமாகும். இதனால் மற்ற உற்சவங்களை விட தேர் உற்சவம் முதன்மை பெறுகின்றது.

இத் தேர் உற்சவ நன்னாளில் இவ்வாலயத்தைச் சார்ந்தவர்கள், உபயகாரர்கள் முக்கியமாக தேர் உபயகாரர்கள், அடியார்கள் எல்லோருக்கும் நல்லாசிகளை உரித்தாக்கி, எமது நாட்டில் தர்மம் நீதி வளர எம் பெருமானின் அருள் கிடைக்க பிரார்த்திப்போமாக.

சிவஸ்ரீ சு.சுந்தரராஜ குருக்கள்
ஆலயமகோற்சவ குரு.

## சம்புநாதரின் தேரின் வடத்தை தொட்டு அவன் அருளில் இடம் பிடிப்போம்

ஈழத்தின் வடபால் உள்ள யாழ்ப்பாணத்தில் பழமை வாய்ந்த சிவாலயங்களில் சம்புநாதேஸ்வரமும் ஒன்று. இவ்வாலயம் ஆரம்பத்தில் சம்புகோளத்துறை (திருவடிநிலைக்கு அருகாமையில் )யில் இருந்ததாகவும் பின் கடலரிப்பினால் அழிந்ததாகவும், பின் அங்குள்ள சம்புநாதர் தற்போதுள்ள இடத்தில் பிரதிட்டை செய்யப்பட்டதாகவும் ஐதீகம் உள்ளது. இவ்வாலயத்தில் அண்மைக்காலத்தில் யோகி கார்த்திகேசு என்ற சித்தாந்தப் புலமையும் அருள் நலமும் கொண்டவர் வாழ்ந்தமையும் சிறப்புக்குரியதாகும். சிவராத்திரியான இன்றைய நாளில் சம்புநாதர் தேரேறி வீதி வலம் வந்து மக்களுக்கு அருள்பாலிப்பது மகோன்னதமான செயலாகும்.

பிரபஞ்ச சக்தியான சிவனின் எல்லையில்லாக் கருணையில் இணைந்து கொள்ளும் இப்புண்ணிய நாளில் பரிபூரண நம்பிக்கையுடன் சம்புநாதரின் தேரின் வடத்தைத் தொட்டு அவன் அருளில் இடம் பிடிப்போம். இப்புண்ணிய நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவது பெரும் பாக்கியமாகும்.

திருமதி. நாச்சியார் செல்லநாயகம்
முதுநிலை விரிவுரையாளர்,
இந்துநாகரித்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

எண்ணுவார்ச் நெஞ்சில் நன்றுவான்
ஈசன் என்பது முதுமொழி
சம்பு நாத சுவாமி திருவருளால்
கோயிலும் அடியவர்களும் சிறப்புற்று
இருக்க சம்பு நாரை வேண்டுகிறோம்.

*இங்ஙனம்*
*பரிபாலன சபை*
*செ.சிவம்.*

## உபயகாரர்

*சீனிவாசகம் இந்திரகுமார்*

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 04

## கோணேசர் கல்வெட்டு சில ஆராய்ச்சிக்குறிப்புகள்

பேராசிரியர் சி.பத்மநாதன்

இவ்வுரையிலே அவற்றுள் ஒரு சில விடயங்களையே தொட்டுச் செல்ல முடியும். இம்மூன்று நூல்களிலும் கைலாசபுராணமே காலத்தால் முற்பட்டது. அது திருக்கோணேஸ்வரம் உன்னதமான நிலையில் அமைந்திருந்த காலத்தில் எழுதப்பட்டது, ஆலயத்தோடு தொடர்புடைய சமகால வழமைகளையும் சென்ற காலச் சிறப்புக்களையும் காட்சியாலும், கேள்வியாலும், ஏடுகள் வாயிலாகவும், பிற ஆவணங்கள் மூலமாகவும் அறிந்திருந்த மகாவித்துவான் ஒருவரால் அது பாடப் பெற்றது.

காப்பிய அம்சங்களைக் கொண்ட அத் தலபுராணம் ஏழு சருக்கங்களையும், அந்தாதித் தொடையிலுள்ள அறுநூற்று முப்பத்திநான்கு விருத்தப்பாக்களையுங்கொண்டுள்ளது. முதலாஞ் சருக்கமும் ஏழாஞ் சருக்கமுந்தவிர்ந்த ஏனைய ஐந்து சருக்கங்களும் சமஸ்கிருத மொழியிலமைந்த மச்சேந்திய புராணத்தை ஆதாரமாகக் கொண்டவை. கோணேஸ்வரத்து முதன்மையாளர்களாக விளங்கிய மகா பண்டிதர்களால் எழுதப்பெற்றது என்று கொள்ளத்தக்கனதான மச்சேந்திய புராணம், தலம் பற்றிய ஒரு மான்மியமாக விளங்கியது என்றுங் கருதமுடிகின்றது. அது மறைந்து ஒழித்துவிட்டமையால், கைலாச புராணத்தின் மூலமாகவே அதனைப் பற்றி அனுமானித்து அறிந்துகொள்ளலாம். மகாபுராணங்களின் பஞ்ச லக்ஷணங்களுள் ஊழிக்காலம் , ஊழியின் பின் படைப்பு என்ற இரண்டினைப் பற்றிய கதைகளைத் திருமலைத் தலத்தின் மகிமைகளை விளக்குவதற்கு ஏற்ற வகையில், அதன் ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார் என்று எண்ணத்தோன்றும்.

கைலாசபுராணத்து ஈழமண்டலச் சருக்கம் முழுமையும் ஆசிரியரின் அறிவினையுங் கற்பனாசக்தியினையும் ஆதாரமாகக் கொண்டது. ஈழநாட்டு மலை வளமும், நில வளமும், நீர் வளமும் சுவை நயத்துடன் வர்ணிக்கப்படுகின்றது. அவ் வர்ணனைகள் தமிழிலக்கிய மரபுகளுக்கு ஏற்ப அமைந்துள்ளமையும் கவனித்தற்குரியது.

கோணேஸ்வர வரலாற்றம்சங்களைச் சுவைநயம்படக் கூறும் பகுதி கைலாசபுராணத்து ஏழாம் சருக்கமானதிருநகரச் சருக்கம் என்னும் பகுதியாகும். குளக்கோட்டன், கயவாகு என்னும் மன்னர்கள் கோணேஸ்வரத்தில் ஆற்றிய திருப்பணிகளையும், கோயிலுக்குச் செய்த நிவந்தங்களையும் தானங்களையும் ஆலய ஏற்பாடுகளையும் ஓரளவு விரிவாக இச் சருக்கம் விவரிக்கின்றது. கோயிலைப் பற்றிய சாசனங்கள் முதலான ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டே கைலாச புராணத்தின் இறுதிச் சருக்கம் எழுதப்பட்டுள்ளது.

கைலாசபுராணம் கோணேசர் கல்வெட்டிற்கு முற்பட்டதென்றும் அதன் மூலங்களுள் ஒன்றாய் வியங்கியதென்றும் கருதுவதற்குச் சில சான்றுகள் உள்ளன. இவ்விரு நூல்களிலுங் காப்புச் செய்யுள் ஒன்றாகவே உள்ளது. அது மேல்வருமாறு உள்ளது.

*உதய மால்வரை ஒண்கதிரென்ன என்*
*இதய அம்புயத்து என்றும் விளங்கு*
*மத கடாசல வாரண மாமுக*
*முதல் வனைங்கர மூர்த்தி பதாம்புயம்*

கைலாச புராணத்திற் சொல்லப் பெற்ற விடயங்களின் விளக்கமாகவுந் தொடர்ச்சியாகவுங் கோணேசர் கல்வெட்டு அமைகின்றது. அத்துடன் அப்புராணங் கூறாத பல விடயங்களும் அதிலே காணப்படுகின்றன. கைலாச புராணத்துக் காப்புச் செய்யுலையே கவிராச வரோதயன் கோணேசர் கல்வெட்டின் காப்புச் செய்யுலாக அமைத்துக் கொண்டார். சொல்லரிய திரிகைலைப் பெருமையெல்லாம் தூய புராணக்கதையிற் சொன்னதுண்டு எனக் கோணேசர் கல்வெட்டின் இரண்டாம் பாடலில் வரும் அடியும், அதன் ஆசிரியர் கைலாச புரா ணத்தை நன்கு அறிந்திருந்தார் என்பதை உணர்த்துகிறது.

கைலாச புராணமும் கோணேசர் கல்வெட்டும் வெவ்வேறு காலங்களுக்கு உரியவை. அவற்றுள் முன்னையது கோணேசர் கோயில் சிறப்புற்று விளங்கிய காலத்திலேயே எழுதப்பெற்றது. எனவே, குளக்கோட்டன், கயபாகு ராசன் ஆகியோரைப் பற்றி அதிலே வர்ணிக்கப்பட்ட விபரங்கள் தெளிவானவையாகவும் , மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு , அவற்றை ஒட்டி செல்வனவாகவும் அமைந்தன. கோணேசர் கல்வெட்டிலே அவ்விரு மன்னரைப் பற்றியுங் கூறப்பெற்ற செய்திகள் ஓரளவு குழம்பிய நிலையிலுள்ளனவாகவே காணப்படுகின்றன.

கோணேசர் கோயில் பற்றிய ஏற்பாடுகளும் சேவைகளும் நிலைகுழைந்திருந்த ஒரு காலத்திலே கோணேசர் கல்வெட்டு உருவாக்கப் பெற்றது என்று கருதலாம். மாறி வரும் சூழ்நிலைக்கு ஏற்ப ஆலய சேவைகளை புதிதாக வரையறை செய்ய வேண்டிய ஒருகாலத்திலே அது உருவாக்கப்பெற்றது என்று கொள்ள வேண்டும். திருகோணமலையில் இருந்த கோணேசர் கோயிலைப் போர்த்துக்கேயர் இடித்தழித்த பின்பு, கோயிலிலிருந்த ஆவணங்கள் பல அழிவுற்றன. எஞ்சியுள்ளவற்றை அக்கறையுள்ள சிலர் அங்கும் இங்குமாக எடுத்துச் சென்றனர். தம்பல காமத்திலே கோணேசர் கோயிலைப் புதிதாக அமைத்த பொழுது , பழைய கோயிலுக்குரிய உடமைகளும் சேவைகளும் புதிய கோயிலுக்கு உரியனவாகின. அவற்றைப் புதிதாக வரையறை செய்ய வேண்டிய தேவையின் நிமித்தமாகவே கோணேசர் கல்வெட்டு உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சொல்லுற்ற சீர்க் குளக்கோட்டு மன்னன்
சொற்படி சொல்லெனவே
கல்வெட்டுப் பாட்டென்னப் பாடினன்
பாதிகதைப் பொருளாய்
அல்லுற்ற கண்டர்தம் பொற்பாதம்
நெஞ்சினமுத்தி இகல்
வெல்லுற்ற சீர்க்கவிராச
வரோதய விற்பனனே.

சொல்லரிய திரிகயிலைப் பெருமையெல்லாம்
தூயபுராணக் கதையிற் சொன்னதுண்டு
வல்லதொரு வன்னிமையுந் தானந்தாரும்
வரிப்பத்து மாமிவர்கள் வந்தவாறும்
நல்லதொரு பூசைவிதி நடக்குமாறும் நடந்ததன்
மேலினி நடக்கும் நடத்தை யாவும்
சொல்லெனவே சோதிடத்தின் நிலையே கண்ட
கவிராசன் சொல்லுஞ்சீரே.

சொல்லுற்ற சீர்க்குளக்கோட்டு மன்னன் சொற்படி சொல்லெனவே என்ற அடியானது குளக்கோட்டன் சொல்லியவற்றைச் சொல்வாயாக என்று ஒருவர் பணிக்க, அதற்கிசைந்து ஆசிரியர் கல்வெட்டுப் பாடினார் என்பதைக் குறிக்கின்றது. எனவே, இதனைச் செய்யுமாறு யார் பணித்தார், எதற்காகப் பணித்தார் என்ற வினாக்கள் எழுகின்றன. இவற்றுள் முதலாவது வினாவிற்கு விளக்கம் அளிக்குமிடத்து நாட்டு வழமைகளையும், நிலைமைகளையும் அவற்றோடு ஆலய சேவைகள் பற்றிய விடயங்களையும் கருத்திற் கொள்ளவேண்டும். கோணேச கோயிலுக்குரிய தேவதானங்கள் திருகோண மலைப் பிராந்தியத்திலுள்ள நான்கு பற்றுக்களிலும் பரந்து காணப்பட்டன. அத்துடன் தலைமுறை தல்லமுறையாக ஆலயசேவை புரியும் குடியானவர்களும் அப்பற்றுக்கள் எல்லாவற்றிலும் பரந்திருந்தனர். எனவே, திருகோணமலைப் பிராந்தியம் முழுவதிலும் அதிகாரம் செலுத்துகின்ற பிரதேச அரசரால் அல்லது அவர்கள் மீது மேலாதிக்கம் செலுத்துகின்ற வேந்தன் ஒருவனால் மட்டுமே ஆலய வேற்பாடுகளை வரையறை செய்தல் கூடும். கோணேசர் கல்வெட்டுக் குறிக்கும் ஆலயவேற்பாடுகளின் புனர் நிர்மாணத்திற்கு இத்தகையோரில் யார் பொறுப்பாக இருந்தனர் என்பதை வருங் கால ஆராய்ச்சியாளர் ஒருவேளை முடிவு செய்யக்கூடும்.

இரண்டாம் பாடலிலே நல்லதொரு பூசை விதி நடக்குமாறும் நடந்ததன் மேலினி நடக்கும் நடத்தை யாவும் சொல்லனவே என வரும் தொடர்கள் சிந்தனைக் குரியவை. ஆலய சேவைகள் ஒரு சமயத்திலே தடைப்பட்டிருந்தமையும், அதனால் முன்னைய வழமைகளுக்கு ஏற்ப அவற்றை எதிர்காலத்திலே சீரமைக்க வேண்டியிருந்தமையினையும், அதன் பொருட்டு முற்காலத்து வழமைகளை தொகுத்து வரையற்றப்படுத்த வேண்டியதன் அவசியமிருந்தமையினையும் இவற்றால் உய்த் துணரமுடிகின்றது. (தொடரும்)

---

# ஜெனரல் சரத் பொன்சேகாவை உடனடியாக விடுதலை செய்க

## ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

(கொழும்பு)

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.



பல்கட்சி அரசியல் கலாசாரத்தை ஒடுக்குவதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முனைப்பு காட்டி வருவதாக இதிய ஊடகங்களுக்கு ரணில் விக்ரமசிங்க கருத்து வெளியிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவின் கைது ஜனநாயம், அரசியல் சாசனம் மற்றும் நாட்டின் சட்டங்களுக்கு விரோதமான செயலாகும். குற்றச்சாட்டுக்கள் காணப்பட்டாலும் அவை சாதாரண சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்பட வேண்டும்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்வது குறித்து கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் வெற்றிகரமாக அரசியலை மேற்கொண்ட பலரை உதார ணம் காட்ட முடியும். மேஜர் ஜெனரல் கிராண்ட் ஓய்வு பெற்றதன் பின்னர் அமெரிக்க குடியரசுக் கட்சியின் சார் பில் தேர்தலில் போட்டியிட்டு அந்நாட்டு ஜனாதிபதியாக பதவியேற்றார். இவ்வாறான கலாசாரம் இராணுவ சட்டங்களுக்கு புறம்பானதல்ல. ஜனாதிபதித் தேர்தல் முறைகேடுகள் தொடர்பில் மனுவொன்றை தாக்கல் செய்யும் பணி களில் ஈடுபட்டிருந்த போது ஜெனரல் பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட் டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லாதொழித்த மிக முக்கியமான படைத்தளபதி யான ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய சகல அரசியல் கட்சிகளும் ஒன்றி ணைந்து செயற்பட வேண்டுமென ரணில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மரு தானை தொழில்நுட்ப சந்திக்கு அருகாமையில் நேற்று முன்தினம் சத்தியாக்கிரக போராட்ட மொன்று நடைபெற்றது. (ந-5)

---

# போராளிகள் கொல்லப்பட்ட சம்பவம் விஜய் நம்பியாரை காக்க முயற்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் போராளிகள் படையினரால் கொல்லப்பட்டது தொடர்பில் விஜய் நம்பியாரைப் பாதுகாக்கும் முயற்சிகள் இரகசியமாக நடந்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

வெள்ளைக் கொடியுடன் விடுதலைப்புலிகள் இயக்க மூத்த தலைவர்கள் இராணுவத்திடம் சரணடைய வந்த போது அவர்கள் அனைவரும் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், இந்தச் சம்பவம் நடந்தபோது விஜய் நம்பியார் கொழும்பில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் சரணடையச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த விவகாரத்தில் நம்பியாரின் தொடர்புகளும் தற்போது வலுவாக ஆராயப்பட்டு வருகின்றன.

ஆனால் நம்பியார் குறித்த பேச்சே கூடாது என்று பான்கீமூன் கருதுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மேலும் பொன்சேகா இது குறித்து கூறிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பான்கீமூன் ஒரு போர்க்குற்ற விசாரணைக்கு உத்தரவிடும் போது கூட விஜய் நம்பியார் குறித்து எவ்வித விசாரணையும் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள அவர் தீர்மானித்திருப்பதாகவும் தெரிகிறது.

ஆனால் இதை ஐ.நா.வுக்கான இலங்கைத் தூதர் பாலிதகோகண மறுத்துள்ளார். சம்பவம் நடந்த போது விஜய் நம்பியார் கொழும்பிலேயே இல்லை என்று அவர் கூறியுள்ளார். விஜய் நம்பியாரின் சகோதரரான நம்பியார் தான் இலங்கை இராணுவத்தின் ஆலோசகர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

### மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து போட்டியிடவுள்ளேன் வாசுதேவநாணயக்கார

ஜனநாயக இடதுசாரி முன்னணயின் தலைவர் வாசுதேவ நாணயக்கார மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து இரத்தினபுரி பிரதேசத்தில் எகலியகொட தேர்தல் தொகுதியில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளேன்.

நான் முன்னர் பல தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தேன். ஆனால் 2000ஆம் ஆண்டும் 2004ஆம் ஆண்டும் எனது கட்சி சார்பில் போட்டியிட்டேன். ஆனால் வெற்றி பெறவில்லை என மேலும் தெரிவித்துள்ளார். (2-6)



யாழ். ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.முரளிதரன் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சட்டத்தரணி திருமதி ப. அன்ரனி மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் : றம்சன்)

## தொழிற்பயிற்சி கண்காட்சி

(அல்வாய்)

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய சமூகக் கற்கை நிலையம் நடத்தும் தொழிற்பயிற்சி நெறிக் கண்காட்சி நாளை சனிக்கிழமை முதல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை காலை 10 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய முறைசாரா கல்விப்பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வே.இராஜகுமாரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6-19)

## விவசாய உபகரணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய உபகரணங்களை பெற வருபவர்கள் குடும்ப் அட்டையுடன் வருகை தருமாறு பிரதேசசெயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (30-2)

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி தனுலோகபதி ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயத்தின் மகா சிவராத்திரி தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் 1 ஆம் ஜாமப் பூசை மாலை 5 மணிக்கும் 2 ஆம் ஜாமப் பூசை இரவு 9 மணிக்கும் 3 ஆம் ஜாமப்பூசை நள்ளிரவு 12.30 மணிக்கும் 4 ஆம் ஜாமப் பூசை பின்னிரவு 4 மணிக்கும் இடம் பெறவுள்ளது.

விசேடமாக இலிங்கோற்ப மூர்த்திக்கு சொர்ண புஸ்பவில்ல அர்ச்சனை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (30-2)

## எமக்கான போக்குவரத்துச் சேவைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை

### மிருசுவில் படித்த மகளிர் திட்டப் பகுதி

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் படித்த மகளிர் திட்டப் பகுதிக்கான போக்குவரத்து சேவை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த யுத்த் நடவடிக்கை காரணமாக பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட இப்பகுதி அண்மையில் மீள்குடியேற்றத்திற்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யுத்த நடவடிக்கைகளுக்கு முன்பு இங்கு இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ் சேவையானது மூன்று வேளை நடைபெற்று வந்ததுடன் மின்சார விநியோக நடவடிக்கைகளும் ஒவ்வொரு வீதிகளின் ஊடாகவும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்தன.

தற்போது பொதுமக்கள் மீள்குடியேறி சுமார் நான்கு மாத காலமாகியும் இப் பகுதிக்கான அடிப்படை வசதிகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டதுடன் இங்கு பிரசித்தி பெற்ற அம்மன் ஆலயம் ஒன்று காணப்படுவதுடன் குடாநாட்டில் பல பகுதிகளில் இருந்து அவ் ஆலயத்திற்கு தினமும் பல பக்த அடியவர்கள் மிகுந்த சிரமங்களின் மத்தியில் தனியார் வாகனங்களில் வருகை தருவதாக தெரிவிக்கப் படுவதுடன் எழுதுமட்டுவாழ் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம் என்பன இப் பகுதிக்கு அப்பால் அமைந்துள்ளதாகவும் இங்கு பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் மாணவர்களும் பல்வேறு போக்குவரத்து சிரமங்களை எதிர் நோக்குவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த யுத்த காலப் பகுதியில் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டதால் பல வருட காலப் பகுதியாக இங்குள்ள வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுவதாக ஊர் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் தற்போது மீள்குடியேறி வரும் பிரதேசங்களை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கு அரச மற்றும் அரச சார் பற்ற அமைப்புக்கள் முன்வரவேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுவதுடன் இங்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு சம்மந்தப்பட்ட உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (2)

## பொதுமக்களின் ஒத்துழைப்புடன் மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை சுமார் பத்து வருடங்களின் பிற்பாடு அடிப்படை வசதிகள் மிகக் குறைந்த நிலையில் அப் பகுதி பொதுமக்களின் ஒத்துழைப்புடன் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது கல்வி பொதுத்தராதர வகுப்பு வரை ஆரம்பிக்கப்புட்டுள்ள இப் பாடசாலையில் சுமார் 40 வரையான மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன் இப்பிரதேசத்தில் விரைவான மீள் குடியேற்றம் கட்டம் கட்டமாக இடம் பெற்று வருவதால் இரண்டாம் தவணை காலப்பகுதியில் மேலும் பல மாணவர்கள் இணைந்து கொள்ள பாடசாலை முதல்வர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய குறித்த பாடசாலை தனது சகோதர பாடசாலையான எழுது மட்டுவாழ் ஸ்ரீ கணேசா பாடசாலையுடன் இணைந்தும் தமது கற்றல் கற்பித்தல், நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எழுதுமட்டுவாழ் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை சேர்ந்த 5 ஆசியர்களும் எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா பாடசாலையை சேர்ந்த 3 ஆசியர்களும் இம் மாணவர்களுக்கான செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர்.

இதனால் குறித்த பாடசாலையில் நிரந்தர ஆசிரியர்களாக பணிபுரிந்த பல ஆசிரியர்கள் கடந்த யுத்த நடவடிக்கைகளால் குடாநாட்டிலுள்ள வெவ்வேறு பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பணி புரிவதாக சுட்டிக் காட்டப்படுவதுடன் குறித்த இப் பாடசாலையில் நிரந்தர ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் அனைவரையும் தமது சொந்த பாடசாலைகளுக்கு கடமைக்கு திரும்ப தென்மராட்சி கல்வி வலயத்தினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் மக்களின் ஒத்துழைப்புடன் பல கட்டங்களாக சிரமதானப் பணிகள் பாடசாலையில் இடம் பெற்றுள்ளதுடன் கல்வி செயற்பாடுகளை செவ்வனே தடையின்றி தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு எப்போதும் தயாராகவுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4)

## விளையாட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடைபெறவுள்ள ஆண்களுக்கான கிரிக்கெற் மற்றும் வலைப்பந்து சுற்றுப்போட்டிகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (2-30)




## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செல்வி நா. ஜெயராணி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இந்நிகழ்வில் வலிமேற்கு பிரதேச செயலர் திருமதி வேதநந்தினி பாபு கலந்துசிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட செயலக சமூக சேவைகள் அமைச்சின் அபிவிருத்தி உதவியாளர் பா. ஸ்ரீபவன் கலந்துகொள்ளவுள்ளார். (6-2-4)

✠ ✠ ✠

(அல்வாய்)

பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி நாளை சனிக்கிழமை பி.ப.2மணிக்கு உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் அதிபர் கா. புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக பருத்தித்துறைக் கோட்டக்கல்வி அதிகாரி பா. இரகுநாதன் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவிக்கவுள்ளார். (6-4-19)

✠ ✠ ✠

(அல்வாய்)

பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் பொ. அருமைச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை மறைகோட்ட முதல்வரும் பங்குத்தந்தையுமான அருட்பணி பேணாட்றெக்னோ, பாடசாலையின் முன்னாள் அதிபர் செ. சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார். (6-4-19)

## கல்வி விழிப்பூட்டற் செயலமர்வு


(யாழ்ப்பாணம்)

திறந்த பாடசாலைகள் கல்வி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான விழிப்பூட்டற் செயலமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் செயற்றிட்ட அதிகாரிகள் ஆகி யோரை கலந்து கொள்ளுமாறும் இவர்களிற்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளத்தாகவும் வடமாகாண கல்விப்பணிப்பாளர் வி.இராசையா அறிவித்துள்ளார்.

முறைசார் கல்வியை பலதரப்பட்ட காரணங்களினால் கற்க முடியாமல் போனவர்களிற்கு அவர்களின் வயது, சிவில் அந்தஸ்து, தொழில் நிலை போன்றவற்றைக் கவனத்தில் கொள்ளாது பலதரப்பட்ட வசதி வாய்ப்புக்கள் தொழில் நுட்பமுறைகளின் மூலம் முறைசார் கல்வியைப்பெற்றுக்கொடுப்பதை நோக்கமாகக்கொண்டே இச்செயலமர்வு நடைபெறவுள்ளது. (14-19-ப)





நீர்வை தி. மயூரகிரி எழுதிய எவ்வழி நல்வழி அவ்வழி நாடுவோம் என்ற பல்சமய உறவாடல் நூலின் அறிமுக விழாவில் அதி. வண கலாநிதி எஸ்.ஜெபநேசன் மங்கல விளக்கேற்றுவதையும் அதிபர் இ.குணநாதன் அருகில் நிற்பதையும் மேடையில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோருள் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பாக அறிக்கை கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நேற்று முன்தினம் நீதிமன்ற கட்டட பிரதேசத்தில் தோற்றுவிக்கப்பட்டதாக கூறப்படும் இயல்பற்ற சூழ்நிலை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ளமையை கண்டித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இரண்டு தரப்புக்கிடையில் மோதல் இடம்பெற்றது. இதன்போது காவல்துறையினர் கண்ணீர் புகை மற்றும் தடியடி பிரயோகம் என்பவற்றை மேற் கொண்டனர்.

இந்நிலையில், இது தொடர்பில் நீதிமன்ற பதிவாளரை அழைத்த கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி வாழைத்தோட்ட காவல்துறையின் பொறுப்பதிகாரியை, சம்பவம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (2-6)

## வீதி விளக்கின்மையால் போக்குவரத்தில் சிரமம்

(வேலணை)

வேலணை வங்களாவடி சந்தி உள்ளிட்ட சில முக்கிய சந்திகளில் இரவு வேளைகளில் மின் விளக்குகள் இல்லாமையால் இருளில் வீதியால் பயணிப்போர் உட்பட பொதுமக்கள் பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றனர்.

இருள் படர்ந்திருப்பதால் கட்டாக்காலி கால்நடைகள் படுத்திருப்பதால் வீதி விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

முன்பு மாலை 6 மணியுடன் போக்குவரத்து மந்தமடைவதால் வியாபார நிலையங்கள் மூடப்பட்டு வீதி வெறிச்சோடியிருக்கும். ஆனால் தற்போது 10 மணிக்கும் போக்குவரத்துக்கள் நடைபெறுவதால் 9 மணி வரை வியாபார நிலையங்கள் திறந்திருப்பதாலும் மக்கள் நடமாட்டம் காணப்படுகிறது. எனவே இது விடயத்தில் உரியவர்கள் கவனமெடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் தெரிவித்துள்ளனர். (2-ப)

## அரசினால் வழங்கப்படும் உணவு குறித்து எனது கணவருக்கு நம்பிக்கையில்லை

**-அனோமா பொன்சேகா-**

(கொழும்பு)

அரசாங்கத்தால் வழங்கப்படும் உணவு மற்றும் நீராகாரம் தொடர்பில் நம்பிக்கை யில்லாததன் காரணமாக தனது கணவர் கைதாகியதிலிருந்து கடந்த செவ்வாய்க் கிழமை இரவு வரை உணவு எதனையும் உட்கொள்ள வில்லை என ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். எனது கணவருக்கு கடந்த 9ஆம் திகதி இரவு எட்டு மணியளவில் நான் உணவை எடுத்துச் சென்றேன். அதுவரை அவர் தேனீர் கூட அருந்தியிருக்கவில்லை.

இராணுவத்தளபதியாகவும் கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியாகவும் பணியாற்றி அவரை இராணுவ அதிகாரிகளே மனிதாபிமான மற்றமுறையிலும் சட்ட விரோதமாகவும் கடத்திச் சென்றதால் எனது கணவர் நம்பிக்கை இழந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமையில் இருந்து அவர் மருந்து உட்கொள்ளவில்லை. நான் செல்லும்போது மருந்தைக் கொண்டு சென்றேன். தன்னை நடத்திய விதத்தினால் தான் தடுத்துவைக்கப்பட்டிருந்த இடத்தில் வழங்கப்படும் உணவு குறித்து அவருக்கு நம்பிக்கை இல்லை.

எனது கணவர் கொழும்புக் கோட்டையிலுள்ள கடற்படை முகாமில் திருமணமான கனிஷ்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சிறிய வீடொன்றில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

அங்கு போதிய வசதிகள் இல்லை. அவரை சந்திக்க எனக்கு ஒரு மணி நேரம் கால அவகாசம் வழங்கப்பட்டது.

இவ் ஒரு மணித்தியாலத்தை இரண்டாகப் பிரித்து தினமும் அரை மணித்தியாலயங்கள் என்ற வகையில் இருமுறை அவரைப் பார்க்கச் செல்கிறேன். செல்லும் போது மதியம் மற்றும் இரவு உணவை எடுத்துச் செல்கிறேன்.

எவ்வாறாயினும் நாட்டில் சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்தும் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என அவர் கூறுகிறார். நாட்டு மக்களுக்காக தொடர்ந்து கடமைப்பட்டுள்ளதாகவும் தனது கணவர் கூறியதாக அனோமா பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (2-6)

## பெரும்பான்மை பலத்தை எமக்கு பெற்றுதாருங்கள்

**-மக்களை கோருகிறார் அமைச்சர் யாப்பா-**

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் 138 ஆசனங்களை பெறுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. எனவே எங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுத் தருமாறு மக்களிடம் கோரிக்கை விடுகின்றோம் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சில் கடந்த புதன் கிழமை காலை நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெறவுள்ளது. நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளைப் பார்க்கும் போது எங்களுக்கு 131 ஆசனங்கள் கிடைப்பது உறுதியாகவுள்ளது

அந்த வகையில் கடந்த தேர்தலில் எதிரணிக்கு வாக்களித்தவர்களில் 10 வீதமானோர் இம்முறை வாக்களிக்கமாட்டார்கள் என்று நம்புகின்றோம்.

மேலும் கடந்த தேர்தலில் எதிரணிக்கு வாக்களித்தவர்களில் 10 வீதமானோர் இம்முறை ஆளும் கட்சிக்கு வாக்களிப்பர் என்றும் நம்புகின்றோம்.

அவ்வாறு பார்க்கும் போது நாங்கள் 138 ஆசனங்களை பெறுவோம். அத்துடன் எதிரணி தற்போது பிளவு கண்டுள்ளது. பொதுத் தேர்தலில் எங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுத்தருமாறு மக்களிடம் கோரிக்கை விடுகின்றோம்.

தேர்தலில் எங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும் போது எங்களால் நாட்டின் அரசியல் அமைப்பில் ஆரோக் கியமான பல மாற்றங்களைச் செய்ய முடியும். அந்த சந்தர்ப்பத்தை எங்களுக்கு வழங்குமாறு மக்களிடம் கோருகின்றோம்.

மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்திற்கு அமைவாக தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த எங்களால் முடியும்.

தற்போதைய தேர்தல் முறைமைக்கு அதிகளவு நிதி செலவிடப்படுகின்றது. எனவே இவற்றில் மாற்றத்தைக்கொண்டுவர எமக்கு சந்தர்ப்பம் தாருங்கள் என்றார். (2-6)







தென்மராட்சி கிழக்கு அரிமாக் கழகத்திற்கு விஜயம் செய்த ஆளுநர் லயன் லக்சுமன் ஜெயசிங்கி கண்பார்வையற்ற ஒருவருக்கு வெள்ளைப் பிரம்பு வழங்குவதையும் அருகில் உப ஆளுநர் , கழகத் தலைவர்கள் நிற்பதையும் , திருமதி அனோமா ஜெயசிங்கி மாதர் சங்கத்திற்கு மரக்கன்றுகளை வழங்குவதையும் படங்களில் காணலாம்.





கே.கே.எஸ். வீதியில் நேற்று திறந்து வைக்கப்பட்ட எச்.எஸ்.பி.சி. வங்கித் திறப்பு விழாவில் பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நாடாவெட்டி வங்கியைத் திறந்து வைப்பதையும் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் கலாநிதி பீற்றர் கெயிட்ஸ், யாழ். அரச அதிபர் கே. கணேஸ் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் எச்.எஸ்.பி.சி. வங்கியின் இலங்கை - மாலைதீவுக்கான நிறைவேற்றதிகாரி நிக்லாவ் உரையாற்றுவதையும் முதலாவது வங்கிக் கணக்கை ஆரம்பித்து வைப்பதையும் எச். எஸ்.பி.சி. வங்கியின் யாழ். முகாமையாளர் எஸ். அரவிந்தன் நன்றியுரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# மனித உரிமைகளை ஆராய சுயாதீனக்குழு நியமனம்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

மனித உரிமைகள் உட்பட பல்வேறு விடயங்களை ஆராய்வதற்குச் சுயாதீனக் குழுவொன்றை நியமித்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான்கீமூனுக்கு ஜனாதிபதி மகிந்த ரூஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் சார்ந்த ஏனைய விடயங்களையும் பயங்கரவாதிகளுக்கு எதிரான இறுதி நடவடிக்கையின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவும் இந்தக் குழு ஆராயவுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துடன் தொலைபேசியில் ஜனாதிபதி உரையாடியபோது இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றமைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் ஜனாதிபதி ராஜபக்ஷவைத் தொலைபேசியில் தொடர்புகொண்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிக்கிறது.

இவ்வேளையில் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுவத்துவதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றியடைய வேண்டுமென ஐக்கிய நாடுகள் செயலாளர் வாழ்த்தியதாக அந்தச் செய்தி குறிப்பிடுகிறது.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலைச் சுமுகமாக நடத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக பான் கீ மூனுக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் குறிக்கோள் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அத்தோடு நாடு முழுவதும் குறிப்பாக விடுவிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் விளக்கியுள்ளதோடு அதற்கு ஐக்கிய நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் தெரிவித்தார்.

மனிதாபிமான அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு அரச சார்பற்ற அமைப்புக்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் தெரிவித்த அவர் அந்த அமைப்புக்கள் தமது செயற்பாடுகளைத் தொடர்வதற்கு அனுமதி வழங்குவதாகவும் கடந்த கால நிகழ்வுகளைக் கருத்திற் கொண்டு பொறுப்புணர்வுடனும் நேர்மையாகவும் அவை செயற்படவேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சமாதானத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்துவதற்கு இலங்கையில் மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபை பூரண ஒத்துழைப்பை வழங்குமென அதன் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். (2-6)

# பிரதமரின் புதல்வர் களுத்துறையில் போட்டி

(கொழும்பு)

பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவின் புதல்வரும் மேல்மாகாண சபையின் உறுப்பினருமான விதுர விக்ரமநாயக்க எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

இவர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலை சின்னத்தில் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிடவிருக்கிறார். தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் விண்ணப்பத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பு மனுக்களை பரிசீலிக்கும் அமைச்சர்கள் தலைமையிலான குழுவினரிடம் கையளித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் புதல்வரும் இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் தலைவருமாகிய நாமல் ராஜபக்ச அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிடவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-6)

# தன்னியக்க மழை மானிகள் பொருத்தப்படவுள்ளன

(கொழும்பு)

தெரிவு செய்யப்பட்ட தொகுதிகளில் 100 மழை வீழ்ச்சியைப் பதிவு செய்யும் தன்னியக்க மானிகள் பொருத்தப்படவுள்ளன.

தேசிய கட்டிட ஆய்வு நிலையம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்தக் கருவிகளின் துணையுடன் அவ்வப்பகுதி மழை வீழ்ச்சிகள் பற்றிய தரவுகளைப் பெறமுடியுமென நிலையத்தின் மண் சரிவுப் பிரிவின் பொறுப்பதிகாரி ஆர். எம். எஸ். பண்டார தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் மண் சரிவு தொடர்பாக மக்களுக்கு முன்கூட்டியே அறிவுறுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மண் சரிவு அபாயமுள்ள மாவட்டங்களில் இந்த அளவை மானிகளைப் பொருத்தவுள்ளதாக அவர் கூறினார். இதற்கமைய குறிப்பாக மண் சரிவு அபாய முள்ளதென இனங்காணப்பட்டுள்ள 10 மாவட்டங்களில் இவை பொருத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# முறைப்பாடுகளை ஏற்க துரித தொலைபேசி அழைப்புக்கள்

## சுகாதார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பொதுமக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்கும் நோக்கில் அவர்களிடமிருந்து முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் துரித தொலைபேசி அழைப்புக்கான மூன்று எண்களை அறிமுகப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த அவசர அழைப்பின் மூலம் பொது மக்களுக்கு சுகாதார சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களும் சுகாதார உயர் அதிகாரிகளுக்கு தமது குறைகளை முறையிடலாம். சிகிச்சையில் புறக்கணிப்பு, மருந்துத் தட்டுப்பாடு மற்றும் டெங்கு நுளம்புகள் பெருகும் இடம் தொடர்பான தகவல்களை 24 மணி நேரமும் இயங்கும் இந்த இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு முறையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடனுக்குடன் இந்த முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (2-6)

# சோமாலிய கடற் கொள்ளையரிடம் அகப்பட்ட தமிழக மாலுமிகள் விடுதலை

(தூத்துக்குடி)

சோமாலிய கடற்கொள்ளையர்களிடம் சிக்கித்தவித்த தமிழக கப்பல் மாலுமிகள் இருவர் மூன்றரை மாதத்திற்குப்பின் விடுவிக்கப்பட்டனர். மும்பை தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான அல்கலிக் என்ற கப்பல் கடந்தாண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி ரஷ்யாவிலிருந்து தென்னாபிரிக்காவிற்கு கோதுமை ஏற்றிச் சென்றது.

சோமாலிய கடல்பகுதியில் சைலீஸ் தீவு அருகே அக்கப்பல் சென்றபோது அதை துப்பாக்கி முனையில் சோமாலிய கடற்கொள்ளையர்கள் வழிமறித்தனர். அதிலிருந்த 24 இந்தியர்கள் உள்ளிட்ட 26 மாலுமிகளை இரகசிய இடத்தில் சிறைவைத்தனர் அதில் இருவர். தமிழர்கள் இருவரையும் விடுதலை செய்ய பெரும் தொகையை கொள்ளையர்கள் கேட்டதால் அவர்களை மீட்பதில் சிக்கல் ஏற்பட்டது. அவர்களை மீட்க வலியுறுத்தி மத்திய மாநில அரசுகள் அமைச்சர்கள் கலெக்டர் மாலுமிகள் சங்கத்திடம் குடும்பத்தினர் மனுகொடுத்தனர். கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்நிலையில் கப்பல் நிறுவனம் கடற்கொள்ளையர்களிடம் நடத்திய நீண்ட பேச்சுவார்தையில் உடன்பாடு ஏற்பட்டது. அதையடுத்து மூன்றரை மாதத்திற்குப்பின் கடந்த செவ்வாய்க்கிழமை 26 மாலுமிகளும் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களது விடுதலைக்காக கப்பல் நிறுவனம் பல கோடி ரூபாயை கடற்கொள்ளையர்களுக்கு தந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (2-6)

# பொறியியற் கல்லூரி மாணவி அசிட் குடித்து தற்கொலை

பிரேமலதா வண்டலூரில் உள்ள கிரசென்ட் என்ஜினீயரிங் கல்லூரியில் 2ஆம் ஆண்டு என்ஜினீயரிங் தகவல் தொழில்நுட்ப பிரிவில் படித்து வரும் மாணவி. கடந்த 5ஆம் திகதி காலையில் அவர் வழக்கம் போல் கல்லூரிக்கு சென்றார். காலையில் ஆய்வகத்தில் வகுப்பு நடந்தது. அப்போது பிரேமலதா அசிட் குடித்து மயங்கி விழுந்தார். உடனே அதிர்ச்சி அடைந்த சக மாணவர்கள் உடனடியாக கல்லூரி நிர்வாகத்துக்கு தகவல் தெரிவித்தனர்.

உடனடியாக அவரை அருகில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளித்தனர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக போரூர் ராமச்சந்திரா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அசிட் குடித்ததால் கிட்னி செயலிழந்து இரத்த ஓட்டமும் குறைந்தது. கடந்த 4 நாட்களாக கோமா நிலையில் இருந்த பிரேமலதா பரிதாபமாக இறந்தார்.

அதே கல்லூரியில் பிரேமலதாவின் அண்ணன் சசிகுமார் 4ஆவது ஆண்டு என்ஜினீயரிங் படித்து வருகிறார். தங்கையின் தற்கொலை பற்றி அவர் ஓட்டேரி பொலிஸில் புகார் செய்தார். அதில் கூறியிருப்பதாவது, எங்கள் கல்லூரியில் 4ஆம் ஆண்டு படிக்கும் ஒரு மாணவர் கடந்த 2 மாதமாக என் தங்கையை ஈவ்டீசிங் செய்து வந்துள்ளார். மிகவும் மனவருத்தம் அடைந்த எங்கள் வீட்டில் சொல்லி அழுதார். நான் அந்த மாணவரை கண்டித்தேன்.

ஆனாலும் அவர் கேட்கவில்லை மறுநாள் என் தங்கை கையை பிடித்து இழுத்து திட்டி இருக்கிறார். இதனால் மன உளைச்சல் அடைந்த என் தங்கை தற்கொலை செய்துள்ளார். (2-2)



மகாசிவராத்திரியை முன்னிட்டு பெங்களூரில் உள்ள சிவாலயத்தில் பக்தர்கள் குவியத்தொடங்கியுள்ளனர். அங்குள்ள பிரமாண்டமான சிவன் சிலைக்கு பக்தர்கள் பூசை நடத்தி செல்கின்றனர்.

# நாத்திகத்தை திணிக்கவும் இல்லை ஆன்மிகத்தை புறக்கணிக்கவும் இல்லை

## கலைஞர் கருணாநிதி




நான் எழுதிய திருக்குறள் உரையில் நாத்திகத்தை திணிக்கவும் இல்லை ஆன்மீகத்தை புறக்கணிக்கவும் இல்லை என்று முதல்வர் கருணாநிதி குறிப்பிட்டார்.

சென்னையில் புதன்கிழமை நடைபெற்ற விழாவில் உலகத் திருக்குறள் பேரவை சார்பில் வழங்கப்பட்ட திருக்குறள் பேரொளி விருதைப் பெற்றுக்கொண்டு அவர் பேசுகையில்,

மறைந்த குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரிடம் எனக்கு அன்பும், பாசமும், பரிவும் உண்டு தமிழ் மீதும் தமிழ் இனத்தின் மீதும் அவர் கொண்டிருந்த பற்றைக் கண்டு நான் வியந்துள்ளேன் அவரைப் போலவே இளைய பொன்னம்பல அடிகளாரும் செயல்பட்டு வருகிறார்.

நான் குறளோவியம் படைத்துள்ளேன் எனது குறளோவியத்தில் மகாத்மா காந்தி ரஷிய புரட்சியாளர் லெனின், கார்ல் மார்க்ஸ் ஆகியோரின் வாழ்க்கைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

குறளோவியம் மட்டுமல்ல, திருக்குறளுக்கு நான் உரையும் எழுதியுள்ளேன் அதில் நான் எந்தக் கொள்கையையும் புகுத்த வில்லை சிலர் எழுதிய திருக்குறள் உரையில் நாத்திகத்தை புகுத்தியிருப்பார்கள் சிலர் ஆத்திகத்தை திணித்திருப்பார்கள். நாத்திகத்தை திணிக்கவும் இல்லை ஆத்திகத்தைப் புறக்கணிக்கவும் இல்லை வள்ளுவர் காலத்து உண்மைகளை அப்படியே உரையாக தந்துள்ளேன்.

எனக்கு வழங்கப்பட்ட விருது என்னை மேலும் ஊக்கப்படுத்த வேண்டும் என்னை




எனக்கு திருக்குறள் பேரொளி என்ற விருது வழங்கியுள்ளார்கள் திருக்குறளே ஒரு பேரொளிதான் என்னிடம் பேரொளி எதுவும் இல்லை. ஆனால் இங்கே மேடையில் என்னைச் சுற்றி அடிகளார் நீதியரசர் கோகுலகிருஷ்ணன் போன்ற பேரொளிகள் உள்ளன அவர்களுக்கு இந்த விருதை காணிக்கையாக்குகிறேன்.

எனது திருக்குறள் பணிகளைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக அடிகளார் தெரிவித்தார். நடைமுறை வாழ்க்கைச் சம்பவங்கள் வரலாற்றுக் கதைகள் மற்றும் இதர சம்பவங்கள் ஆகியவற்றைக் கொண்டு மேலும் பாண்டியத்தியம் பெற்றவனாக ஆக்க வேண்டும் என்று விரும்புகிறேன் என்றார்.

முதல்வர் கருணாநிதி உலகத்திருக்குறள் பேரவையின் தலைவர் குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் முதல்வர் கருணாநிதிக்கு திருக்குறள் பேரொளி விருதை வழங்கினார். அதோடு ஏலக்காய் மாலை, கிரீடம், செங்கோல் மற்றும் நினைவுப் பரிசையும் வழங்கினார்.

குன்றக்குடியைச் சேர்ந்த இரண்டு கால்களும் ஊனமுற்ற சக்திவேல் என்ற இளைஞர் வரைந்த முதல்வர் கருணாநிதியின் ஆளுயர ஓவியம் அவருக்கு பரிசாக வழங்கப்பட்டது. (2-6)

# இடுப்பு மூட்டு மாற்றுச்சத்திரச்சிகிச்சையில் 'சைலண்ட் ஹிப்டு' நவீன சிகிச்சை முறை

## சென்னை மியாட் மருத்துவமனையில் அறிமுகம்

(சென்னை)

இடுப்பு மூட்டு மாற்று சத்திரசிகிச்சையில், சைலண்ட் ஹிப் என்ற நவீன சிகிச்சை முறை ஆசியாவிலே முதல் முறையாக மியாட் மருத்துவமனையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள மியாட் மருத்துவமனையில் சர்வதேச மூட்டு மற்றும் அறுவை சிகிச்சை குறித்து இரண்டு நாட்கள் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் மருத்துவமனை நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ் தலைமை வகித்தார். மூட்டு மாற்று அறுவைச்சிகிச்சை நிபுணர் டாக்டர் ஸ்ரீராம் கருத்தரங்கை தொடங்கி வைத்தார்.

இந்தியா, ஜேர்மனி, இத்தாலி, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து 250 டாக்டர்கள் பங்கேற்றனர். ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த டாக்டர் நிர்கோலா போஸ் மற்றும் டாக்டர் பிரீத்வி மோகன்தாஸ் ஆகியோர் 42 வயதான ஆண் ஒருவரின் இடுப்பு மூட்டு மாற்றுக்கு சைலன் கிப் என்ற நவீன அறுவைச் சிகிச்சை செய்தனர். அந்த காட்சியை கருத்தரங்கில் பங்கேற்ற டாக்டர்கள் வீடியோ கொன்பரன்சிங் மூலம் பார்த்தனர்.

இது குறித்து டாக்டர் பிரீத்வி மோகன்தாஸ் கூறியதாவது, முழங்கால், மூட்டு, இடுப்பு மூட்டு மற்றும் தோள் மூட்டுக்களை மாற்றுவது சாதாரணமாகிவிட்டது. இப்போது நோயாளிகள் விரும்பும் வகையில் அறுவைச் சிகிச்சை செய்கின்றோம். பெரியளவில் வெட்டி சிகிச்சை அளிக்காமல் சாவித்துவார அறுவைச்சிகிச்சை முறையில் செய்தால் நோயாளிகள் உடனே எழுந்து நடக்க முடியும்.

இதன் மூலம் அதிக இரத்தப்போக்கு ஏற்படாது. இதுவரை செய்த மூட்டுமாற்று அறுவை சிகிச்சையில், உடலில் கூடுதலாக ஒரு பொருள் வைக்கப்பட்டது. போன்ற உணர்வு இருக்கும்.

ஆனால் சைலண்ட் கிப் முறையில், டைனியம் மூலம் தயாரித்த செயற்கை மூட்டு, இடுப்புப் பகுதியில் வைத்து சத்திரசிகிச்சை செய்யப்படும். இதைப் பொருத்திக் கொண்டவருக்கு இடுப்பில் அந்நிய பொருள் இருப்பது போன்ற உணர்வே இருக்காது. இந்த சிகிச்சைக்கு 2 இலட்சம் இந்திய ரூபாக்கள் செலவாகும் என்றார். (2-6)

# நுளம்புகளை விரட்டும் மொபைல் ரிங்டோன்

(புதுடில்லி)

இரத்தம் உறிஞ்சும் நுளம்புகளை விரட்ட நுளம்புச்சுருள், ஸ்பிரே, கிரீம் போன்றவை இனித் தேவையில்லை அதற்குப் பதிலாக சில மொபைல் போன்களிலிருந்து வரும் ஒலியே நுளம்புகளை விரட்டி விடுகிறது.

உலகில் மொபைல் போன் சந்தையில் குறிப்பிட்ட இடத்தில் இந்தியா இருக்கிறது. இந்திய வாடிக்கையாளர்களைக் கவர பல்வேறு திட்டங்களை பல மொபைல் நிறுவனங்கள் செயல்படுத்தி வருகின்றன.

அவற்றில் இப்போது நுளம்பை விரட்டும் ரிங்டோன்கள் பிரபலமாகி வருகின்றன.

மனிதனின் காதால் கேட்க முடியாத அளவுக்கு மெல்லிய ஒலி அலைகள் கொண்ட ரிங்டோன்கள் மொபைல் போன்களிலிருந்து வெளிப்படும்.

இந்த ரிங்டோன்கள் மொபைல் போன் வைத்திருப்பவரைச் சுற்றி ஒரு மீற்றர் தூரத்துக்கு நுளம்பை அண்டவிடாமல் துரத்தி விடும். இது போன்ற மொபைல் போன்களை மைக்ரோவேவ் இன்டர் மேட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனமும் வேறு சில நிறுவனங்களும் வெளியிட்டுள்ளன.

மேலும் www.gackoandfly.com, www.Jetcityoraneg.com ஆகிய வெப்சைட்களும் இது போன்ற ரிங்டோன்களை இலவசமாகத்தர விறக்கம் செய்து தருகின்றன. (2-6)




விளையாட்டு மற்றும் கலைகளில் அரசியலை கலக்க வேண்டாம் என்று மணல் சிப்பத்தால் அழகுற வலியுறுத்தும் மணற்சிப்பக்கலைஞர் சுதர்சன் பட்நாயக்க இடம்; பூரிக்கடற்கரை, ஒரிசா

# உல்பா தீவிரவாதிகளுக்கு ஆயுத விநியோகம்; காலிதா ஜியாவின் மகனுக்கும் தொடர்பு


## பங்களாதேஷ் அரசியலில் பரபரப்பு

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் காலிதா ஜியாவின் மகனுக்கு உல்பா தீவிர வாதிகளுக்கு ஆயுதம் கடத்திய வழக்கில் தொடர்பு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

பங்களாதேஷைச் சேர்ந்தவர் ஹபீசுர் ரகுமான். அசாமில் செயற்படும் உல்பா தீவிர வாதிகளுக்கு ஆயுதம் கடத்திய வழக்கில் இவர் கைது செய்யப்பட்டார். வழக்கு விசார ணைக்காக டாக்கா நீதிமன்றில் சமீபத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். ஆயுதம் கடத்தியதை ஒத்துக்கொண்டு நீதிமன்றில் வாக்குமூலம் அளித்தார். அங்கு அவர் கூறியதாவது; கடந்த 2004இல் பங்களா தேஷிலிருந்து அசாமில் உள்ள உல்பா தீவிரவாதிகளுக்கு ஆயுதம் கடத்தியது உண்மைதான். 10 லொறிகளில் ஏராளமான ஆயுதங்கள் கடத்திச் செல்லப் பட்டன. இருந்தாலும் பொலிசார் அவற்றைப் பறிமுதல் செய்துவிட்டனர்.

இந்த வழக்கில் முன்னாள் பிரதமர் காலிதா ஜியாவின் மகன் தாரிக் ரகுமானுக்கும் தொடர்பு உள்ளது. ஆயுதம் கடத்தப்படுவ தற்கு முன் உல்பா தலைவர் பரூவாவுடன் நானும் தாரிக்கும் சந்தித்தோம். அப்போது காலிதா ஜியா தலைமையிலான பங்களா தேஷ் தேசியவாத கட்சி – ஜமாத் கூட்டணியின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது.

இந்த ஆயதக் கடத்தலில் பங்களாதேஷ் தேசிய பாதுகாப்பு உளவுப் பிரிவு, சிட்டகாங் உர நிறுவனம் உள்ளிட்ட சில நிறுவனங் களின் அதிகாரிகளுக்கும் தொடர்பு உள்ளது. இவ்வாறு அந்த வாக்குமூலத்தில் ஹபீசுர் கூறி யுள்ளார். ஹபீசுரின் இந்த வாக்குமூலம் பங் களாதேஷ் அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (2-6)



ஆப்கானிஸ்தானில் நிலவி வரும் கடும் பனிப்பொழிவில் சிக்கி பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் பலர் உயிரிழந்திருப்பதாக அஞ்சப்படுகிறது. மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஆப்கான் இராணுவத்தினர்.

# அமெரிக்காவில் கடும் பனிப்பொழிவு; இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(சிக்காகோ)


அமெரிக்காவில் கடும் பனிப் பொழிவு நிலவுகிறது. சிக்காகோ நகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங் களில் கடந்த செவ்வாயன்று கடுமையான பனிப்புயல் வீசியதால் 7 முதல் 12 அங்குல உயரத்துக்குப் பனிக்கட்டிகள் உறைந்தன.



இவற்றை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. 80 பள்ளிக்கூடங்களுக்கு விடு முறை அளிக்கப்பட்டது.

மேலும் புகைமூட்டமும் இருந்ததால் வாகனப் போக்கு வரத்து கடுமையாகப் பாதிக்கப் பட்டது.

பனிப்பொழிவு காரணமாக நேற்று முன்தினம் சிக்காகோவில் உள்ள ஒப்ஹேர் மற்றும் மிட்வே விமான நிலையங்களிலிருந்து புறப்பட வேண்டிய 600 விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டன. பனிப்பொழிவு காரணமாக சாலைகளில் ஆங்காங்கே சிறு சிறு விபத் துக்கள் ஏற்பட்டதாகவும் பெரிய அளவில் அசம்பாவிதம் ஏதும் ஏற்படவில்லை எனவும் இலினாய்ஸ் காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (2-6)



அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனை அடுத்த பெய்ன் பீல்டு என்ற இடத்தில் உள்ள போயிங் நிறுவன தொழிற்சாலையில் புதிய போயிங் 747 ரக விமானங்கள் தயாரிககப்படுகின்றன.

# ஏற்றுமதி வர்த்தகத்தில் சீனா முதலிடம்; ஜேர்மனியைப் பின்னுக்குத் தள்ளியது

(பெர்லின்)

உலக அளவில் ஏற்றுமதி வர்த்தகத்தில் இதுவரை ஜேர்மனி முதலிடத்தில் இருந்தது. கடந்த 2003ஆம் ஆண்டு முதல் இந்தப் பெருமையைத் தக்கவைத்து வந்தது. தற் போது இந்தப் பெருமையை ஜேர்மனியிடம் இருந்து சீனா தட்டிப் பறித்தது. கடந்த ஆண்டு ஜேர்மனி 11 இலட்சம் கோடி அமெரிக்க டொலர் அளவுக்கு ஏற்றுமதி வர்த்தகத்தை செய்துள் ளது.

ஆனால் சீனா 12 இலட்சம் கோடி அமெ ரிக்க டொலர் அளவுக்கு தனது ஏற்றுமதி வர்த் தகத்தைப் பெருக்கி ஜேர்மனியைப் பின் னுக்குத் தள்ளியது. தற்போது ஏற்றுமதி வியா பாரத்தில் முதலிடம் பிடித்துள்ளது.

இதற்கு உலக பொருளாதார சரிவே கார ணம் என கூறப்படுகிறது. ஜேர்மனியின் வர்த் தக நடப்பு நாடுகளான அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் பணப்புழக்கம் குறைந்துவிட்டதால் நுகர்வோர்களின் வாங்கும் திறன் குறைந்துவிட்டது.

குறிப்பாக ஜேர்மனியின் ஏற்றுமதி பொருட்களான என்ஜினீயரிங், ஓட்டோ மொபைல்ஸ், மரச்சாமான்கள் போன்றவை அங்கு சரிவர விற்பனையாகவில்லை.

அதேநேரத்தில் சீனா தனது ஏற்றுமதி சந்தையின் அளவைப் பெருக்கிக் கொண் டது. மேலும் இங்கு ஜேர்மனியைவிட 15 மடங்கு அதிக அளவில் பொருட்கள் ஏற்று மதி செய்யப்படுகிறது.

இருந்தாலும் நவீன தொழில்நுட்ப வசதி யுடன் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஜேர்மனி மீண் டும் முதலிடத்தைப் பிடிக்கும் என அந்நாட்டு கூட்டமைப்பின் இயக்குநர் வெனர் சனாப் பாப் தெரிவித்தார்.

(2-6)




# ஜாக்சனின் உடலில் காய தழும்புகள்; பிரேத பரிசோதனை அறிக்கை தகவல்

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

மதியை மயக்கக்கூடிய அளவுக்கு அதிக மாக போதை தரக்கூடிய மாத்திரைகளை அதிக அளவில் சாப்பிட்டதே மைக்கல் ஜாக்சனின் மரணத்திற்கு காரணம் என அவரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரியவந்துள்ளது.

மேலும் ஜாக்சனின் கழுத்து, புஜங்கள் மற்றும் காலில் துளையிட்டதற்கான காயத் தழும்புகள் இருந்தன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதா வது; ஜாக்சனின் உடலில் துளையிட்டதற் கான 13 அடையாளங்கள் உட்பட மொத்தம் 38 அடையாள தழும்புகள் இருந்தன. ஜாக்சன் உடல் எடை 136 பவுண்டும் (ஒரு பவுண்ட் என்பது 450 கிராம்) அவரின் உயரம் 69 அங்குலமும் இருந்தது.

மண்டையின் மேற்பாகத்தில் பச்சை குத்தப்பட்டிருந்தது. கருமையான மை மூலம் அந்த பச்சை குத்தப்பட்டிருந்தது. அவரின் புருவங்கள் மற்றும் கண்ணிமை யிலும் உதட்டிலும் பச்சை குத்தப்பட்டிருந்தது. மேலும் அவரின் தலையில் இருந்த ஒன்றி ரண்டு முடிகளும் அவர் அணிந்திருந்த விக் கில் உள்ளவையே. மயக்கத்தை உண்டாக் கக்கூடிய மாத்திரைகளை அதிக அளவில் சாப்பிட்டது அவரின் உயிரைப் பறித்து விட்டது. இவ்வாறு பரிசோதனை அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## இங்கிலாந்தில்

# இந்து மதப்படி இறுதிச் சடங்கு நடத்த நீதிமன்றம் அனுமதி

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டில் இருந்து பாரம் பரிய முறைப்படி திறந்த வெளியில் உடலை தகனம் செய்ய அந்த நாட்டு நீதிமன்றம் அனு மதி அளித்துள்ளது. இது தொடர்பாக தேவேந் தர் கய் என்பவர் தொடர்ந்த வழக்கில் இப்படித் தீர்ப்பு கூறப்பட்டுள்ளது.

71வயதான கய் பல ஆண்டுகளாக இந்துப் பாரம்பரிய முறைப்படி திறந்த வெளியில் தக னம் செய்ய உரிமை கேட்டு நீதிமன்றங்களில் சட்டப் போராட்டம் நடத்தி வருகிறார். அவரது கோரிக்கையை மேன் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. இதை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்ததைத் தொடர்ந்து நீதிமன்றம் இந்து பாரம் பரிய முறைப்படி திறந்த வெளியில் தகனம் செய்ய அனுமதியளித்துள்ளது. (2-6)

# கிரேக்க அரசின் பொருளாதார திட்டங்களுக்கு எதிர்ப்பு

கிரேக்க நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் உள்ள மாபெரும் நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க அரசாங்கம் கொண்டுள்ள திட்டங் களுக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் அரசுத்துறை ஊழியர்கள் தேசிய அளவில் வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களையும் அவர்கள் நடத்தியுள்ளனர்.

விமானப் போக்குவரத்து இடை நிறுத்தப் பட்டுள்ளது. பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டுள் ளன. மருத்தவமனைகளிலும் அத்தியாவசிய சேவைகள் மட்டும் செயற்படுகின்றன.

நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளை யும் எடுப்பதில் தமது அரசாங்கம் சிரத்தை யாக உள்ளது என கிரேக்கப் பிரதமர் ஜோர்ஜ் பாபாந்திரியூ கூறியுள்ளார்.

யூரோ நாணயத்தைப் பயன்படுத்தும் மற்ற நாடுகளால் கிரேக்கத்துக்கு நிதி உதவி கிடைக்கும் என்ற ஊகங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (2-6)

## சீனாவின் உதவியுடன்

# செய்தி இணையங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசு திட்டம்

சீனாவின் கணனி தொழில்நுட்பவியலாளர்களின் உதவியுடன் செய்தி இணையத்தளங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது; இலங்கையில் இருந்து வெளிவரும் செய்தி இணையத்தளங்கள் மீது புதிய கட்டுப்பாடுகளை கொண்டு வருவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. அது தொடர்பான பணிகளை தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழு மேற்கொண்டு வருகின்றது.

அரசின் இந்த முயற்சிகளுக்கு உறுதுணையாக சீன இராணுவ தொழில்நுட்பவியலாளர்கள் செயற்பட்டு வருகின்றனர். எதிர்வரும் வாரங்களில் சீனாவை சேர்ந்த பல இராணுவ கணனி தொழில்நுட்ப நிபுணர்கள் இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.

மேலும் இங்கு இருந்து வெளிவரும் செய்தி இணையத்தளங்கள் அனைத்தும் தொலைத் தொடர்பு கட்டுப்பாட்டு சபையில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தொலைத் தொடர்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளதுடன் தொலைத்தொடர்பு நிறுவனம் வழங்கும் இணையத்தள முகவரி ஊடாகவே செய்தி இணையத்தளங்கள் தம்மைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். இவ்வாறான நடைமுறைகளே சீனாவில் பின்பற்றப்படுகின்றன. இந்த நடைமுறைக்காக தொலைத் தொடர்பு நிறுவன ஆணையாளராக அனுசா பல்பிதா நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கையில் கூகுள் இணை யத்தளமும் தடை செய்யப்படவுள்ளது.

மேலும் இணையத்தள சேவைகள் தொடர்பாக ஒரு ஆலோசனை சபையையும் அரசு அமைத்துள்ளது. அதன் கீழ் உள்ள செய்தி இணையத்தளங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதே இதன் பிரதான நோக்கம் என கணனி நிபுணர் ஒருவர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கும்போது தெரிவித்துள்ளார். (2-6)

# பொன்சேகா கைது பதற்ற நிலை தேர்தல் முன் தணிய வாய்ப்புள்ளது

## ஆய்வாளர் கீத பொன்கலன்

(கொழும்பு)

இலங்கையில் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு இன்னும் இரண்டு மாத காலம் இருக்கும் நிலையில் தற்போது சரத் பொன்சேகா கைது செய்யப்பட்ட சம்பவம் காரணத்தால் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை தணிவதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்று கூறுகிறார் இலங்கை அரசியல் பகுப்பாய்வாளர் கீத பொன்கலன்.



இதற்கமைய நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கையில் பெருவாரியான ஆதரவு பெற்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தேர்தலுக்குப் பிந்தைய காலகட்டத்தில் நடந்த இந்தக் கைது சம்பவத்தின் விளைவாக நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் ஆதரவு குறைய பெரியளவில் வாய்ப்பில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கொள்கை ரீதியாக வேறுபட்ட நிலைப்பாட்டை எடுத்திருக்கும் எதிர்க்கட்சிகள் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை முன்னிறுத்தி ஒரே அணியில் திரண்டன. அந்தக் கூட்டணி ஒன்றாக நீடிக்குமா என்ற சந்தேகம் இருந்தது. ஆனால் சரத் பொன்சேகாவின் கைது நாடாளுமன்றத் தேர்தலிலும் இந்தக் கூட்டணி தொடர்வதற்கான வாய்ப்புக்களை அதிகரித்திருக்கிறது என்றார் கீத பொன்கலன். (2-6)

# ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்ய அனுமதி

## சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே வேட்பு மனுத் தாக்கல் செய்ய முடியும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள், சகோதரர்கள், குடும்ப உறுப்பினர்களுக்குத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் சகலருக்கும் சந்தர்ப்பம் வழங்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் சில முக்கியஸ்தர்களின் பிள்ளைகள், சகோதரர்கள் உள்ளிட்டோர் தேர்தலில் களமிறங்கவுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (2-6)

# போலி ஆவண பாஸ்போர்ட் பெற்ற இலங்கையர் திருவனந்தபுரத்தில் கைது

(மதுரை)

போலி ஆவணங்கள் கொடுத்து பாஸ்போர்ட் பெற்ற விவகாரத்தில் இலங்கையைச் சேர்ந்தவர், திருவனந்தபுரம் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். திண்டுக்கலைச் சேர்ந்த ஆறு பேர் போலி ஆவணங்களைக் கொடுத்துப் போலி பெயர்களில் கடந்த ஆண்டு பாஸ்போர்ட் பெற்றனர். மதுரை பாஸ்போர்ட் அலுவலர் ஜோஸ் மாத்யூ கொடுத்த புகாரின் அடிப்படையில் திண்டுக்கல் மத்திய குற்றப்பிரிவு பொலிசார் விசாரித்து வந்தனர்.

இவர்களைப் பற்றிய விபரங்கள் நாடு முழுவதும் உள்ள அனைத்து விமான நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டன. போலி ஆவண பாஸ்போர்ட் பெற்றவர்களில் ஒருவரான ராம்குமார் என்பவர் கடந்த செவ்வாய் இரவு திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு வந்தார்.

இவரைப் பற்றிய தகவல் ஏற்கனவே விமான நிலையத்திற்கு வந்திருந்ததால் அவரை அதிகாரிகள் தடுத்து நிறுத்தி திண்டுக்கல் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தனர். குற்றப் பிரிவு இன்ஸ்பெக்டர் பரமசிவம் தலைமையில் திருவனந்தபுரம் சென்ற பொலிசார் ராம்குமாரை கைது செய்து திண்டுக்கல் அழைத்து வந்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில் பாரீஸ் செல்லும் வழியில் அவர் டுபாய் செல்ல முயன்றது தெரியவந்தது. அவரது உண்மையான பெயர் ஹஜிகரன் கொழும்பு நகரைச் சேர்ந்தவர்.

மேலும் விடுதலைப்புலிகளுடன் இவருக்கு தொடர்பு இல்லை எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. போலி ஆவணம் மூலம் பாஸ்போர்ட் பெற்ற மற்ற ஐந்து பேர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (2-6)

## வானியல் பாசறை செயலமர்வு

தரம் 9இல் ஆங்கில மொழி மூலத்தில் கல்வி கற்றும் மாணவர்களுக்கான வானியல் பாசறை (Astronomy camp) செயலமர்வு முன்னர் குறிப்பிட்டபடி இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் நாளை சனிக்கிழமை காலை 6 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். பங்குபற்றும் மாணவர்கள் எண்ணிக்கையையும் பொறுப்பாக வரும் ஆசிரியர் பெயரையும் இன்று நண்பகல் 12 மணிக்கு முன் ஆசிரியர் நிலையத்தில் வழங்குமாறு அவர் கேட்டுள்ளார். மேலும் மாணவர்கள் இரவு உணவும், நுளம்புத்திரியும், போர்வையும், குளிராடையையும் கொண்டு வரவேண்டும் எனவும் பெற்றோரின் அனுமதிக் கடிதத்தைப் பெற்று மாணவர்களை அனுப்ப வழிப்படுத்துமாறு அதிபர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (6)

# காணாமற்போன ஊடகவியலாளர் தொடர்பில் விரைவில் தகவல் வெளியிடப்படும்

## ஊடக அமைச்சர்

(கொழும்பு)

காணாமற்போயுள்ள லங்கா ஈ நியூஸ் இணைய தளத்தின் ஊடகவியலாளர் பிரகீத் எகனலியகொட தொடர்பிலான தகவல்கள் விரைவில் வெளியிடப்படும் என ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாபா அபேவர்த்ன தெரிவித்துள்ளார்.

இந்தக் காணாமற்போன சம்பவம் தொடர்பில் விரைவில் தகவல்களை வெளியிட முடியும் என காவல்துறை மா அதிபர் மகிந்த பாலசூரிய குறிப்பிட்டுள்ளார்.

பிரகீத் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டுள்ளாரா அல்லது அவரே தலைமறைவாகியுள்ளாரா என்பது குறித்து அரசாங்கத்திற்கு தெரியாது என தெரிவித்துள்ள அவர் லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் அரசாங்கத்திற்கு எதிரான போலிப் பிரசாரங்களை மேற்கொண்டபோதிலும் அதன் ஆசிரியரையோ அல்லது பிரகீத்தையோ அரசாங்கம் கைது செய்யவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் குறித்த இணையத்தளம் அரசாங்கத்திற்கு எதிரான வகையில் பிரசாரங்களை மேற்கொண்டு வந்ததாகவும் குறித்த ஊடகவியலாளர் காணாமற்போன சம்பவம் தொடர்பில் அரசாங்கத்தின் மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# பரபரப்பை ஏற்படுத்திய புலி ஆதரவு நாட்காட்டி

## கோவையில் சம்பவம்

(சோமனூர்)

கோவையில் இருந்து வெளியிடப்பட்டு மாநிலம் முழுவதும் பரவலாக விநியோகிக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் ஆதரவு அமைப்பு வெளியிட்டுள்ள மாதக் கலண்டர் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து பொலிசார் இரகசிய விசாரணை மேற்கொண்டுள்ளனர். கோவை, போத்துனூர், ராஜாமுத்தையா நகர் முகவரியில் பாவாணர் பைந்தமிழ் பாசறை என்ற அமைப்பின் பெயரில் அச்சிடப்பட்ட கலண்டர் புலி ஆதரவு பிரமுகர்கள் மத்தியில் அண்மையில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் புலிகள் அமைப்பின் சின்னம் வண்ணத்தில் அச்சிடப்பட்டுள்ள இந்தக் கலண்டரில் 12 மாதங்களுக்கும் தனித்தனியாக தாள்கள் அமைந்துள்ளன. இலங்கையில் உயிரிழந்த புலிகளுக்கும் முள்வேலிக்குள் அடைக்கப்பட்ட தமிழர்களுக்கும் படைக்கப்படுவதாக இதன் முன் பக்கத்தில் உள்ளது.

திகதிகள் அமைந்துள்ள பக்கத்தில் இலங்கை குறித்த வரலாறு, அதில் தமிழர் பங்கு குறித்தும், மறைந்த தமிழக முதல்வர் அண்ணாத்துரை இலங்கைத் தமிழர் நிலை குறித்து அப்போது கூறிய கருத்துக்களும் அனைத்துப் பக்கங்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது தவிர அன்ரன் பாலசிங்கம், கிட்டு உள்ளிட்ட புலிகள் அமைப்பின் பல்வேறு முக்கிய பிரமுகர்கள், மரணம் குறித்தும் தமிழீழ போராட்டத்தில் அவர்கள் பங்கு குறித்தும் விளக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் 15 பேர் குறித்தும், தமிழகத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஆதரவாக தீக்குளித்த 13 பேர் குறித்தும் அவர்களின் புகைப்படத்துடன் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலண்டரில் மாதங்களின் பெயர்கள் தமிழ் பெயருடன், திகதிகள், தமிழ் எண்களிலும் உள்ளன. மேலும் *தமிழ் விடுதலையே தமிழர் விடுதலை* என்ற வாசகம் சுற்றிலும் உள்ளது. மாநிலம் முழுவதும் இந்தக் கலண்டர் புலி ஆதரவாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இந்தக் கலண்டஎ்ர அச்சிட்டு வெளியிட்டுள்ள அமைப்பு குறித்து பொலிசார் இரகசிய விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை உறுதிப்படுத்தப்படும்

## வீ. புத்திரசிகாமணி

(கொழும்பு)

தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை வெகு விரைவில் உறுதி செய்யப்படும் என நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் வீ.புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார்.

வெகுவிரைவில் இந்த உரிமைக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக சட்ட வரைவுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்றம் மீண்டும் கூடியவுடன் சட்டவாக்கப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தகவல்களை அறிந்து கொள்ளும் சட்டத்துடன் சாட்சிகளை பாதுகாக்கும் சட்டமும் அமுல்படுத்தப்பட உள்ளதாகவும் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை 2003 ஆம் ஆண்டு வரையப்பட்ட போதிலும் அதற்கான சட்ட அந்தஸ்து இதுவரையில் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (2-6)

# வளரும் நாடுகளின் எதிர்கால வேளாண்மை

உலகில் உண்மையான வேளாண்மை இந்தியா, இலங்கை, ஆபிரிக்கா, இர ஆகிய நாடுகளில் மட்டுமே நிகழ்கிறது, வடக்கு நாடுகளில் உண்மையான வேளாண்மை அழிந்துவிட்டது. அங்கு நிகழ்வது தொழில் மய வேளாண்மை.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு மர வளர்ப்புடன் எரிசக்தியை மிச்சப்படுத்தும் விவசாயத்தை இணைத்துப் பர்மாகலாச்சர் என்ற ஒரு வேளாண் பண்பாட்டை உருவாக்கிய பில்மோலிசன் செய்த முன்னெச்சரிக்கை இன்று உண்மையாகிவிட்டது. அவர் செய்த முன்னெச்சரிக்கை இது தான்.

இன்னும் இருபது ஆண்டுகளில் அமெரிக்காவின் உதவித் திட்டங்களின் ஏமாற்று வேலைகள் வெட்ட வெளிச்சமாகும். இயற்கை விவசாயத்தின் மீது உண்மையான கவனம் திரும்பும். தொழில்மய விவசாயம் மெல்ல மெல்ல அழிந்துவிடும். பெருகிவரும் சாகுபடிச் செலவைச் சமாளிக்க முடியாது.

தொழில் மய விவசாயத்தில் இடுபொருள் செலவு பெட்ரோல், டீசல் போன்ற மீண்டும் புதுப்பிக்க முடியாத புதைவு எரிசக்தித் தேவையின் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வருகிறது. அதாவது என். பி.கே. என்று சொல்லப்படும் இரசாயன உரங்கள், அழிந்துவரும் புதைவு எரிசக்திகளை வைத்து உற்பத்தியாவதால் பெட்ரோல் விலை உயர்ந்தால் உரவிலையும் உயர்ந்து பட்ஜெட்டின் பெரும்பகுதிச் செலவை உரமானியத்துக்கு மட்டுமே வழங்க வேண்டிவரும்.

இப்படிப்பட்ட உரம், விதைகள் எல்லாம் பன்னாட்டு நிறுவனங்களின் பிடிப்பில் உள்ளன. எவ்வளவு விரைவில் வளரும் நாடுகளின் விவசாயம் பன்னாட்டு முதலாளிகளிலிருந்து மீட்கப்படுகின்றதோ அவ்வளவு விரைவாக வளரும் நாடுகள் நலம் பெறும். வாழ்வியலை மையமிட்ட வேளாண்மையே என்றும் நிலைத்திருக்கும். ஏனெனில் அது தற்சார்புள்ளது. அதில் பெட்ரோலிய எரிசக்தி வீணாவது இல்லை.

அவரின் இந்த முன்னெச்சரிக்கை வாசகங்கள் இன்று உண்மையாகிவிட்டது.

காலநிலைத் தடுமாற்றத்தால் விவசாயம் தடுமாறுகிறது என்று கூறினாலும் சரி, தொழில் மய விவசாயத்தினால காலநிலை தடுமாற்றம் ஏற்படுகிறது என்று கூறினாலும் சரி, காலநிலைத் தடுமாற்றம் அல்லது தட்பவெப்பத் தடுமாற்றம் பசுமையாகக் கெட்ட வாயுக்களால் உருவாகிறது என்பதை அனைவரும் அறிவோம்.

தொழில் நகரங்கள், கார், லொறி போன்ற போக்குவரத்து வாகனங்கள் ஆகியவற்றால் 70 சதவீத கெட்ட வாயுக்கள் உருவாகின்றன. தொழில்மய விவசாயத்தின் பங்கு 30 சதவீத என்பது ஒரு குறைவான மதிப்பீடுதான். ஏனெனில் இரசாயன உர உற்பத்தி, இரசாயன உரங்களின் போக்குவரத்து எல்லாம் தொழில் துறையின் கெட்டவாயு வெளியீட்டுக்கான காரணமாகக் கணக்கிடப்பட்டுள்ளன.

யூரியா, என்.பி.கே. கொம்பளக்ஸ் போன்றவை மண்ணில் இடப்பட்டு வெளியேறும் நைட்ரஸ் ஒக்சைட் என்ற கெட்ட வாயு. நவீன கால்நடை - பால் பண்ணைகளிலிருந்து வெளியாகும் மீத்தேன் என்ற கெட்டவாயு ஆகிய இரண்டும் ஓசோன் படலத்தைத் துளைப்பதில் கார்பன் டை ஒக்சைடைவிட வலிமை வாய்ந்ததாக நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு தட்பவெப்பத் தடுமாற்றத்தை உருவாக்கும் தொழில் மய விவசாயத்தால் உலகளாவிய நிலையில் கோடிக்கணக்கான விவசாயிகளும் தட்பவெப்பத் தடுமாற்றத்திற்குட்பட்ட நிலங்களில் வசிக்கும் 37 கோடி கிராமிய ஏழைகளும் பாதிக்கப்படுவார்கள் என்று ஐ.நா. அமைப்புக்கள் மதிப்பிட்டுள்ளன.

தட்பவெப்பத் தடுமாற்றம் ஏற்படுத்தும் கனமழை, கூடுதல் வெப்பம், கூடுதலான குளிர், கூடுதலான வறட்சி, புயல், வெள்ளம் எல்லாம் நமது விவசாய பட்டப் பழமொழிகளை மாற்றிவிடும். ஆடிப்பட்டம் தேடி விதைத்தால் ஆவணி, புரட்டாதி மாதங்களில் பருவம் பொய்த்து சித்திரை வெய்யில் தாக்கும். சித்திரை மாதம் மழை பெய்யலாம். குளிர் அடிக்கலாம். ஆடிப்பட்டம் பொய்த்தால் தைப் பட்டம் உத்தராயணத்தில் வெய்யில் இல்லாமல் மழை பெய்து தைப்பட்டம் தம்பட்டமாகும். உலகில் 80 சத விவசாயம் மானாவாரிதான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மானாவாரி விவசாயமே மூச்சடைத்துப் போகும் ஆபத்து உள்ளது.

வளரும் நாடுகளில் ஆண்டுக்கு ஆண்டு இரசாயன உரங்களின் தேவை உயர்ந்து வருகிறது. இரசாயன உரங்கள், பெட்ரோல், டீசல் போன்ற மீண்டும் புதுப்பிக்க முடியாத புதைவு எரிசக்தியைப் பயன்படுத்தி உற்பத்தியாவதால் எரிசக்தி நெருக்கடியைத் தோற்றுவிக்கும். அத்தோடு இரசாயன உரப்பயன்பாடு இயற்கை வழி விவசாயத்தைவிட மூன்று மடங்கு கெட்ட வாயுக்களை உருவாக்கித் தட்பவெப்பத் தடுமாற்றத்தை ஏற்படுத்துகிறது.

2030ஐ நாம் நெருங்கும் போது இரசாயன உர உற்பத்தியை 37 சதவீதம் உயர்த்தும் திட்டம் உள்ளதால் கெட்ட வாயுக்களின் உற்பத்தியும் உயர்ந்து, எரிசக்திச் செலவும் உயர்ந்து நமது கண்களை நாமே குத்திக் கொண்டு குருடர்களாக வாழப்போகிறோம். கெட்ட வாயுக்களின் உற்பத்தியாளரான உர நிறுவனங்களும் விதை நிறுவன பகாசூரர்களும் மூன்றாம் உலக நாடுகளின் விவசாயக் கொள்கையை வகுத்து வருகின்றார்கள். அவர்கள் அறிந்ததெல்லாம் உயிர்ச்சூழலுக்கு உலை வைக்கும் ஒரே ரகப் பயிர்பண்பாடு – அதாவது மோனோகல்ச்சர்.

உலகிற்குப் பாதுகாப்பான விவசாயம் பர்மாகல்ச்சரிலும், பல்லுயிர்கல்சச்ர் என்று சொல்லப்படும் பயோடைவர்ஸ் விவசாயத்திலும் உள்ளதை அவர்கள் அறிவார்கள் என்றாலும் விதை நிறுவன - உர நிறுவன பகாசூரர்களுக்கு அவற்றால் சுயலாபம் சிறிதும் இல்லை.

உலகத்தில் இயற்கை விவசாயத்தைப் பரப்புவதில் எல்லா நாடுகளிலும் கிளை அமைப்புக்களைக் கொண்டது ரோடல் நிறுவனம். இந்நிறுவனம் தத்துவ ரீதியாக ஒரு மாற்றுத்திட்டத்தை முன்மொழிந்து எவ்வாறு எதிர்கால இடர்களை தட்பவெப்பத் தடுமாற்றத்துக்குரிய சவாலைச் சந்திப்பது என்பதற்கான சில டிப்ஸ் வழங்கியுள்ளது.

இந்த அரிய யோசனைகளைக் கடைப்பிடித்தால் நாமும் நமது சந்ததிகளும் பிழைக்கவும் நாடு செழிக்கவும் வாய்ப்புக்கள் உண்டு.

கரியமில வாயுவைப் பிடித்து வைத்துப் பிராணவாயுவாக மாற்றும் உயிர் மண்ணை அதாவது பல்லுயிர்களைக் கொண்ட மண்ணை உருவாக்க வேண்டும்.

மண்ணானது நைட்ரஜனைப் பிடித்து வைத்துக் கொண்டு அதேசமயம் நைட்ரிக் ஒக்சைடாக வெளியேற்றாமல் இருக்க பயறுவகைப் பயிர்களான உளுந்து, தட்டைப் பயறு, பாசிப்பயறு, துவரை, அகத்தி, வேர்க்கடலை, வெந்தயம், தக்காளி, அவரை, மொச்சை போன்றவற்றை பயிரிட வேண்டும். இவற்றை ஆங்கிலத்தில் லெகுமினஸ் பயிர்கள் என்பார்கள்.

இவ்வகைப் பயிர்களைக் கலப்பாகவோ, பயிர்ச்சுழற்றி முறையிலோ பயிரிடும் பாரம்பர்ய மரபை மீட்டுயிர்த்தால் யூரியா செலவைக் குறைக்கலாம்.

யூரியாவைப் பயன்படுத்தும்போது பயிர் ஏற்காதவை, நைட்ரேட்டாக மாற்றிக் குடிநீரை விஷமாக்கும் அல்லது நைட்ரிக் ஆவியாக மாறி பிராண்ணனை வாங்கும். அதாவது ஓசோனைக் கிழிக்கும்.

மூன்றாவதாக பெரன்னியல் பயிர்களைச் சாகுபடி செய்வது ரென்னியல் என்றால் அதிக வயதுள்ள பயிர்கள். இதனால் கார்பன் மண்ணுக்குள் இருந்து வெளியேறாமல் இருக்கும். நான்காவதாக பசுமை அல்லது உயிர் மூடாக்கு. அதாவது ஒரு அறுவடைக்குப் பின் முன்கூட்டியே விதைத்துப் பசுமையாக்கி அடுத்த விதைப்பு வரை நிலத்தைத் தரிசாகப் போடாமல் இருத்தல். பொதுவாக நிலத்தைப் பசுமை மாறாமல் வைத்திருக்க வேண்டும். இதனால் மண்ணில் உள்ள நைட்ரஜனானது, நைட்ரஜன் ஒக்சைட் என்ற கெட்ட வாயுவாக வெளியேறாது.

வளரும் நாடுகளின் எதிர்கால வேளாண்மையைப் பற்றி ஆராய்ந்துவரும் வேளாண் விஞ்ஞானி லைம்லைசிங் இன்றைய வேளாண்மை வெளிப்படுத்தும் பசுமையகக் கெட்ட வாயுக்களை எதிர்த்துத் தாக்குப் படிக்கும் திறன் இயற்கை வேளாண்மைக்கு மட்டுமே உண்டு என்கிறார். அவர் விடுத்துள்ள ஒரு செய்தி மடலில் இன்றைய விவசாயம் ஓசோனைத் தின்னும் ஒட்டுமொத்த கெட்ட வாயுக்களில் பத்து முதல் பன்னிரட்டு சதத்தை மேலே செலுத்துகிறதாம். அவற்றில் இ 02 என்ற கரியமில வாயு இ.ஏ4 என்ற மீத்தேன் வாயு ச 2ர் என்ற நைட்ரிக் வாயு அடங்கும்.

கால்நடை வளர்ப்போர் சாணியைச் சேர்த்துக் குவித்து, திறந்த வெளியில் கொட்டுவதால் மீத்தேன் வாயுவும், இரசாயன உரங்களை மண்ணில் கொட்டுவதால் நைட்ரிக் வாயுவும் கெட்ட வாயுக்களாக மாறுகின்றன. பசுமைப் பொருட்களான பயோமாசை எரிப்பதாலும் கார்பன்டை ஒக்சைட் கெட்ட வாயுவாகிறது.

தட்பவெப்பத் தடுமாற்ற 'விளைவைக் கருத்தில் கொள்ளாமல் நாம் செய்யும் விவசாயம் நமக்கே ஆபத்தைத் தேடித்தரும். தட்பவெப்பத் தடுமாற்றத்துக்கு ஏற்ப விவசாயத்தைத் தடுமாறாமல் இட்டுச் செல்வது இயற்கை விவசாயமே.

ஒரு நிலத்தில் ஒரே வகைப் பயிரைச் சாகுபடி செய்யாமல் பலரகப் பயிர்களைச் சாகுபடி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு 'வகையிலும் பலரகங்கள் உண்டு. கத்தரிக்காய் என்று எடுத்துக் கொண்டால் பி.டி. கத்தரிக்காயை மட்டுமே சாகுபடி செய்தால் குலநாசம் ஏற்படும். மாறாக 50 சென்டு நிலத்தில் கத்தரிக்காய் பயிர் செய்ய விரும்பினால் 10 சென்டு பச்சைக் கத்தரிக்காய், 10 சென்டு வெள்ளைக் கத்தரிக்காய் 10 சென்டு ஊதாக் கத்தரி, 10 சென்டு எண்ணெய்க் கத்தரி, 10 சென்று முள்ளுக் கத்தரிக்காய் என்று பிரித்து நடுவதே பயோடைவர்ஸ் விவசாயம்.

இடையிடையே குச்சிப் பந்தலிட்டு புடெல், பீர்க்கை என்று நிறைய இடைவெளிவிட்டு சாகுபடி செய்யலாம். ஒரு பக்கம் திரும்பினால் சோளம், ஒரு பக்கம் திரும்பினால் நெல், ஒரு பக்கம் திரும்பினால் வாழை, ஒரு பக்கம் தீவனப்புல், தட்டைப் பயறு என்று பல வகைகளிலும் பல ரகங்களைக் கலந்து பயிரிட வேண்டும்.

இவ்வாறு செய்யும்போது தட்பவெப்பத் தடுமாற்றத்தைத் தாங்கக்கூடிய வகைகளையும் ரகங்களையும் அறிவது எளிதாகும். ஒரு ரகத்தில் ஏற்படும் நஷ்டத்தை வேறு ரகம் தரும் இலாபத்தைக் கொண்டு சமாளிக்கலாம்.

உண்ணும் பயிர்களில் மட்டுமல்ல கால்நடை வளர்ப்பிலும் இத்திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும். தட்பவெப்பத் தடுமாற்றத்தால் நோய்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆடு, மாடுகள், கடல் மட்டம் உயர்வு, தாழ்வு,வெப்பம் போன்ற கடல் சூழலுக்கு ஏற்ப வாழக்கூடிய மீன்வகை இனப் பெருக்கம் என்று மீன், கால்நடைகளிலும் பல்லுயிர்ப் பெருக்கம் விரும்பப்படுகிறது.

தட்பவெப்பத் தடுமாற்றத்தால் வளரும் நாடுகளில் வாழும் சிறு, குறு விவசாயிகள் மற்றும் மீனவர்கள், ஆதிவாசிகள் அதிக அளவில் உணவு இல்லாமல் மடிவர் என்று ஐ. நா. மதிப்பீடு கூறுகிறது.

தட்பவெப்பத் தடுமாற்றத்தால் அதிகம் தடுமாறக்கூடிய நிலப் பகுதிகளில் வாழும் சுமார் 40 கோடி மக்கள் பல்லுயிர்ப் பெருக்க ரீதியான விவசாயம், மீன் வளர்ப்பு, கால் நடை வளர்ப்பில் ஈடுபடுவதன் மூலம் தங்கள் வாழ்வை வளப்படுத்த வாய்ப்புள்ளதாக பல்லுயிர்ப் பெருக்க-உயிர்ச்சூழல்நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆர். எஸ். நாராயணன்

## சரத்பொன்சேகாவின் மருமகன் இலங்கையிலிருந்து வெளியேற தடை

(கொழும்பு)

ஹைகோப் லிமிற்ட் நிறுவனம் மேற்கொண்ட ஊழல் தொடர்பான விசாரணைகளின் பொருட்டு ஜெனரல் பொன்சேகாவின் மருமகன் நாட்டை விட்டு வெளியேறுவதை கொழும்பு நீதிமன்றம் தடை செய்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை கொழும்பு புறக்கோட்டை நீதிபதி லங்கா ஜெயரட்ண இலங்கை குடியகல்வு மற்றும் குடிவரவு திணைக்களத்திற்கு நேற்று முன்தினம் அனுப்பியுள்ளார்.

இலங்கையில் குற்றப்புலனாய்வு அமைப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை தொடர்ந்தே நீதிமன்றம் இந்த உத்தரவுகளை வழங்கியுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளுக்காக அந்த ஹைகோப் லிமிற்டட். நிறுவனத்தின் பணிப்பாளர் வெலிங்டன் டி கொடெற் என்பவரும் கடந்த மாதம் கைது செய்து பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் வ. ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக யாழ். நிக்கொட் பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் என்.எஸ். ஆர். சிவரூபன், யாழ். பல்கலைக்கழக விலங்கியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அபிராமி சிவரூபன், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-3)

## தேர்தலில் போட்டியிடுவது குறித்த தீர்மானம் அடுத்தவார இறுதியில் எடுக்கப்படும்

### ஜே.வி.பி அறிவித்துள்ளது

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து அடுத்தவாரம் இறுதித்தீர்மானம் எடுக்கப்படுமென ஜே.வி.பி கட்சி அறிவித்துள்ளது.

இதற்கமைய ஐக்கிய தேசியக்கட்சி ஏனைய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தி வருவதாக ஜே.வி.பி. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

தேர்தலில் அன்னப்பட்சி சின்னத்தில் போட்டியிடுவதா அல்லது தனித்துப் போட்டியிடுவதாக என்பது தொடர்பில் அடுத்த வாரமளவில் இறுதித்தீர்மானம் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத்பொன்சேகா கைது செய்யப்படுவார் என தாம் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை எனவும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஜெனரல் பொன்சேகா கைது செய்யப்பட்ட சம்பவம் ஒரு வெட்கக்கேடான செயல் எனவும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஜெனரல் சரத்பொன்சேகாவை விடுதலை செய்ய எதிர்க்கட்சிகள் தீவிரமுனைப்புக்காட்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மில்லியன் கணக்கான வாக்குகளைப் பெற்றுக்கொண்ட பொன்சேகாவின் சேவை மக்களுக்கு அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(2-6)

கஷ்டங்கள் மத்தியிலும் நீ சலனமின்றி அமைதியாக இருக்க கற்றுக்கொள். எல்லாத் தடைகளையும் வெல்வதற்கு இதுவே எளியவழி.

- ஸ்ரீ அரவிந்த அன்னை

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வேதனை நிறைந்த தற்கொலைச் சம்பவங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரண்டு மாணவர்கள் கூட்டாகத் தற்கொலை செய்து கொண்டனர் என்ற செய்தி மனதை வருத்துகின்றது.

பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி பட்டப் படிப்பை மேற்கொண்டிக்கும் போது தற்கொலை செய்து கொள்ளும் மனநிலைக்கு அவர்கள் ஏன் தள்ளப்படுகிறார்கள் என்பது குறித்த ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தற்கொலைக் கலாசாரம் இடையிடையே தலைதூக்கி இருந்தாலும் ஒரு மாணவனும் ஒரு மாணவியும் கூட்டாகத் தற்கொலை செய்துகொள்வதென்பது ஜீரணிக்க முடியாததாகும்.

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் ஒருவன் தற்கொலை செய்து கொண்ட துயரத்தில் இருந்து சீர்மைப் படுவதற்கு முன்னதாக,

யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் இருவர் ஒன்றாகத் தற்கொலை செய்துள்ளனரெனில் அதனை சாதாரண விடயமாக கருதி விடமுடியாது.

பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர் கல்விப் பீடங்கள் அறிவியலை வளர்ப்பது மட்டுமன்றி மற்றவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டுவனவாகவும் இருக்க வேண்டும்.

சமூகத்தில் இடம்பெறக் கூடிய தற்கொலை சம்பவங்களை ஆய்வு செய்து அதனை தடுத்து நிறுத்துவ்து பற்றிய பரிந்துரைகளை முன்வைக்க வேண்டிய பொறுப்பைக் கொண்ட பல்கலைக்கழகங்களிலேயே தற்கொலைகள் தாராளமாக இடம் பெறுமாயின் அடிப்படைகளே சிதறிப்போகும் பரிதாபம் ஏற்படும்.

எனவே பல்கலைக்கழக மாணவர்களிடையே நம்பிக்கையை கட்டியெழுப்பும் பாரிய பொறுப்பை பல்கலைக்கழக சமூகம் காத்திரமாக செய்து முடிக்க வேண்டும்.

இதற்காக பல்கலைக்கழகக் கல்வி–எதிர்கால வாழ்வு–தன்னம்பிக்கை தொடர்பிலான பற்றுறுதிகளை மாணவர் மத்தியில் ஏற்படுத்தும் விடயங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிளிர வேண்டும். இதில் மிகவும் முக்கியமானது பட்டமளிப்பு விழாவாக இருக்கும்.

நான்கு ஐந்து வருடங்கள் படித்து சித்தியடைந்த மாணவர்களைப் பட்டமளிப்பு விழாவைத்து கௌரவிக்கும் நிகழ்வு இருக்கிறதே! அதுவே! எல்லாக் கவலைகளையும் அறுக்க வல்லது.

இருந்தும் எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மகோற்சவத்தை இழந்த மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோயில் போல் பல வருடங்கள் பட்டமளிப்பு விழா இல்லா வெறுமையில் காலம் கழிக்கிறது.

ஏன் இந்த நிலை. ஒருவரை ஒருவர் குறை சொல்வதற்கும், கலையா?–விஞ்ஞானமா? என்று பட்டிமன்றம் நடத்துவதற்கும் நேரமில்லாத போது பட்டமளிப்பிற்கு எங்கே நேரம்?

தற்கொலைகள் மட்டுமே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மொந்தன் வாழைக்கும் முகாரி இசையுடன் அசையும் தோரணத்திற்கும் வகை செய்கிறது அவ்வளவுதான்.

# ஜனாதிபதியின் ரஷ்ய பயணத்தால் நாட்டிற்கு பல அனுகூலங்கள்

## பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும் ரஸ்ய ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலால் நாட்டுக்கு நன்மை பயக்கும் பல திட்டங்களுக்கான உதவிகளைப் புரிய ரஸ்யா முன்வந்துள்ளதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்ற அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரச தலைவர்களுக்கிடையிலான சந்திப்பு பொதுவாக குறுகிய ஒரு நேரத்துக்கே இடம்பெறுவதுண்டு. எனினும் இலங்கை ரஷ்ய ஜனாதிபதிகளுக்கிடையிலான சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றது.

இதன் போது பல முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் அவற்றுக்கு ரஷ்யா சார்பில் திருப்திகரமான வரவேற்பும் கவனமும் அளிக்கப்பட்டது.

அதன் பிரதிபலிப்பு நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பு வழங்குவதாக விளங்குகின்றது. இலங்கையின் கனிமவள ஆராய்ச்சிக்கு உதவ அந்நாடு முன்வந்துள்ளது.

இலங்கை தேயிலை மிகக் கூடுதலான தொகையாக வருடத்துக்கு 42 மில்லியன் கிலோ ரஷ்யாவுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது.அதற்கு 20 வீதம் தீர்வை வரி அறவிடப்படுகிறது. அதற்கு நிவாரணம் வழங்க கோரிக்கை விடப்பட்டது. அது குறித்து கவனம் செலுத்த ரஷ்ய தரப்பினால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் 300 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டதுடன் ஊடக பரிமாற்றுத் திட்டம் ஒன்றுக்கான உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப் பட்டது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2-6)

# பிலிப் அல்ஸ்டன் தொடர்பில் நவனீதம்பிள்ளையிடம் அரசாங்கம் முறைப்பாடு


(கொழும்பு)

சட்ட விரோத படுகொலைகள் மற்றும் தண்டனைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி பிலிப் அல்ஸ்டனின் நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நவனீதம்பிள்ளையிடம் இலங்கை அரசாங்கம் முறைப்பாடு செய்துள்ளது.

குறிப்பாக சனல் 4 வீடியோக் காட்சிகள் தொடர்பில் அல்ஸ்டன் வெளியிட்ட கருத்துக்கள் அதிருப்தி அளிக்கும் வகையில் அமையப் பெற்றதாக இலங்கை இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் உரிமைகள் பேரவை ஆணையாளர் நவனீதம்பிள்ளைக்கும் இலங்கை இராஜதந்திரிகளுக்கும் இடையில் ஜெனிவாவில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்தக் குற்றிச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை விசாரணைக் கொள்கைகளுக்கு புறம்பான வகையில் பிலிப் அல்ஸ்டன் செயற்பட்டுள்ளதாக மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமர சிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## சிவராத்திரி

மகா சிவராத்திரி என்பது மகா என்ற மாதத்தில் வருவதாகவும் மகா என்றால் பாவத்தில் இருந்து விடுபடுவது என்றும் பொருள்படும். பசுவதை, போதையில் கொலை செய்வது, குருவை வதைப்பது, பெரியோரைக் கொல்வது போன்ற கொடிய பாதகங்களினால் ஏற்படும் பாவத்தில் இருந்து விடுதலை அடையக்கூடிய நன்மையை சிவராத்திரியில் நடைபெறும் பூஜை கொடுக்கிறது.

13 இரவுகளைத் தொடர்ந்து வருவது மாத சிவராத்திரி. தைத்திரிய உபநிடதத்தில் மாஸா சிவராத்திரி என்று அழைக்கப்படுகிறது. இதில் மா என்பது சக்தியையும் ஆஸா என்பது அன்னையின் பீடத்தையும் குறிப்பிடுகிறது. இதன் மூலம் மாதந்தோறும் சிவராத்திரி பூசை செய்பவர்கள் அன்னையின் அருளைப் பெறுவார்கள் என்பது விளங்குகின்றது. மாத சிவராத்திரி திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் வந்தால் அது யோக சிவராத்திரி என்று அழைக்கப்படுகிறது. யோக சிவராத்திரி என்பது சந்திரனின் பதினாறு கலைகளை விளக்குவது. அது பரப்பிரமம் சொரூபத்தை காட்டுகிறது என்று பிரஸ்னோபநிடதம் விளக்குகிறது. யோகசிவராத்திரி நமக்கு நம்மை நாமே உணர்ந்து இறைவனைப்பற்றி ஞானம் பெறவேண்டிய அவசியத்தை விளக்குகிறது.

# வெள்ளி நற்சிந்தனை 110

# பக்தியின் மொழி தமிழ்

வாழ்க்கையில் மனிதன் எப்போதும் அச்சத்தை எதிர்கொள்கிறான். அவனுடைய மனதிலே தன்னை காப்பாற்ற யாராவது முன்வரமாட்டார்களா என்ற எதிர்பார்ப்பு இருந்து கொண்டே இருக்கும். எதைக் கண்டாலும் அஞ்சுகின்ற நிலை மனிதனின் மனவளர்ச்சியை பெரிதும் பாதித்து விடும். எனவே அவ்வாறு அல்லல்படுவோரைக் காப்பாற்ற பல முயற்சிகள் நடைபெறுகின்றன. சீர்மிகப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய முயற்சியை எமது சமய குரவர்களும் மேற்கொண்டுள்ளனர்.

தனக்கு யாரும் துணை இல்லையே என மனம் புழுங்குபவைரத்தேற்றுவதற்கு வழிபாடு சிறந்தது. எல்லோருக்கும் என்றும் துணையாய் நிற்கின்ற இறைவன் பற்றிய நம்பிக்கையை எல்லோருக்கும் ஊட்ட வேண்டும். பல்வேறு இன்னல்களை அனுபவித்த திருஞானசம்பந்தர் மனத்திற்குடி கொள்ளும் அச்சத்தைப் போக்க சிறந்த வழி ஒன்றைக் காட்டியுள்ளார்.

தனது வாழ் நாளில் பிற சமய வயப்பட்டு நின்றதனால் மக்கள் பெரும் துன்பத்தை எதிர்கொள்ள வேண்டி வரும் என அஞ்சினார். தனக்கு வரும் துன்பங்களையெல்லாம் நீக்க வல்ல இறைவனை சரண் புகுதலே அச்சம் போக்கும் அரிய வழி எனக் கண்டார். திருவாணைக்காவிலே உறையும் அண்ணலை அடைக்கலம் புகுந்து அச்சத்தை அகற்றும் மனப் பக்குவம் பெறலாம் எனக் கூறுகிறார்.

இறைவனிடம் அடைக்கலமாக எம்மைக்கொடுத்து விட்டால் எத்தகைய காவலும் எமக்குத்தேவையில்லை. இத்தகைய இறை நம்பிக்கையை நாம் உள்ளத்திலே நிறைவாகக் கொண்டிருப்பின் நாம் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. திருஞானசம்பந்தர் பாடிய திருவாணைக்காப் பதிகத்தின் முதல் பாடலே இவ்வாறு எமக்கு ஒரு சிறந்த வழியைக் காட்டுகிறது. அத்திருத்தலத்திலே வீற்றிருந்து அருள் புரியும் இறைவனே "ஆணைக்காவில் அன்னல்" எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். அவனுடைய திருத் தோற்றத்தை நாம் காண்பதற்காக சொற்சித்திரமாக வரைந்து காட்டியுள்ளார். முதல் பாடலில் முதலிரு அடிகளும் அண்ணலை கண் முன்னே காட்டுகின்றன. வானத்துச் சோலையிலே பூத்திருக்கும் வெண்ணிறமான ஒளிவீசும் நிறை நிலவை அதன் துண்டப்பிறையை சடையிலே சூடிய தோற்றம். சிவந்த சடையிலே வெண்மையான துண்டப்பிறை சூடியிருப்பது அழகு நிறைந்த அற்புதமான காட்சியாகும். பிறை தரு சடை , பிறை நிலாவிய சடை, பிறைகொள் சடை பிறைக்கணிச்சடை

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பிறையாருஞ்சடை , பிறையுரு சடை எனப் பலத் தொடர்கள் இக் காட்சியை ஏனைய பாடல்களிலே காட்டியுள்ளன. சடையின் அழகோடு தனது இடப்பாகத்தே இனிய மொழியுடைய தேவியைப் பாகமாகக்கொண்டிருப்பவன் காட்சி தனித்துவமானது. தேவியைப் பாகமாகக் கொண்டவரை அபயமாக நினைத்து வாழும் பக்தி நெறியை திருநாவுக்கரசர் எமக்குத் தந்துள்ளார். ஒரு திருத்தலத்தின் சிறப்பை எல்லோரும் அறிய வேண்டும் என்ற நல்லுறவு நாவுக்கரசருக்கு இருந்தது. திருவானைக் காவல் தலத்தை வணங்குவதால் ஏதும் ஒன்றும் ஏற்படாது எனக் கூறுகிறார்.

நாம் அச்சத்தை எதிர்கொள்வதற்கு நாம் செய்யும் குற்றங்களே காரணமாகும். ஆனால் இறைவழிபாடு எமக்கு குற்றம் செய்யும் குணத்தை அகற்றி எல்லோருக்கும் நல்லது செய்யும் நல்ல குணப்பண்பைத் தரவல்லது. எனவே எல்லோரும் மனப்பயம் அற்று வாழ,சம்பந்தரது பாடலை படிக்க வேண்டும்.

"வானைக் காவில் வெண்மதி மல்கு புல்குவார் சடை
தேனைக் காவிலின் மொழித்தேவி பாகமாயினான்
ஆனைக்காவில் அண்ணலை யபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார் ஏது மேதமில்லை"

# ஆட்சேபனை மனுத்தாக்கலை தடுக்கவே பொன்சேகா கைது

## திஸ்ஸ அத்தநாயக்க



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்வதற்கான ஜெனரல் சரத் பொன்சேகாவின் முயற்சியைத் தடுப்பதற்காகவே பாதுகாப்புப் படையினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதுவிதமான குற்றச்சாட்டுக்களுமின்றி ஜெனரல் சரத் பொன்சேகாவை இராணுவச் சட்டத்திற்கமைய விசாரணை செய்ய முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்; ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை எதிர்த்து எதிர்வரும் 17ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபனை மனுவொன்றை ஜெனரல் சரன் பொன்சேகா மூலம் தாக்கல் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மனுவில் மனுதாரர் கையெழுத்திடவில்லை. எனவே அதனைத் தடுப்பதற்காகவே ஜெனரல் பொன்சேகாவை அரசாங்கம் கடத்தியுள்ளது. இதனை கைது எனக் கூறமுடியாது.

இராணுவத் தளபதியாகப் பதவி வகித்தவரை உயர் அதிகாரிகளால் மட்டுமே கைது செய்ய முடியும்.

ஆனால் சாதாரண படையினராலேயே ஜெனரல் கொண்டுசெல்லப்பட்டுள்ளார். எனவே இதனைக் கைது எனத் தெரிவிக்க முடியாது. கடத்தல் என்றே கூறவேண்டும்.

நாட்டுக்குப் பெருமை தேடிக் கொடுத்த, ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிட்டு 40 இலட்சம் வாக்குகளை பெற்றவரை அரசாங்கம் எதுவிதமான குற்றச்சாட்டுக்களுமின்றி கைது செய்துள்ளது.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தேடி வருவதாகவும் சட்டமா அதிபரின் உதவியைக் கோரியுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவிக்கின்றது. அப்படியானால் இச்சம்பவமானது முற்று முழுதான அரசியல் பழிவாங்கலாகும்.

ஜெனரல் எங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளாரென்பது தொடர்பில் தகவல் எதுவும் இல்லை. அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் நிலவுகிறது. எனவே சர்வதேச உதவியை நாடியுள்ளோம்.

இங்குள்ள வெளிநாட்டுத் தூதர்களுக்கு நிலைமையைத் தெளிவுபடுத்தியுள்ளோம். இராணுவச் சட்டத்திற்கமையே ஜெனரல் கைது செய்யப்பட்டதாகவும் தளபதியாக இருந்தபோது குற்றங்களை இழைத்துள்ளதாகவும் அரசாங்கம் குற்றம் சாட்டுகிறது.

அப்படியென்றால் இராணுவத் தளபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் கூட்டுப் படைகளின் பிரதானி என்ற பதவி எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது?

விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் பதவியை வழங்குவதற்கும் அரசாங்கம் தயாரானது. இதுவும் எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது எனக் கேள்வி கேட்க விரும்புகிறேன்.

இதேவேளை ஜெனரல் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கிய ஓய்வுபெற்ற படையினர் பலர் கைது செய்யப்பட்டு எதுவிதமான குற்றச்சாட்டுகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பெருமளவிலானவர்களின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்படுகின்றன.

நாடு இன்று சர்வாதிகாரத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. பேசுவதற்கு, எழுதுவதற்கு, விமர்சிப்பதற்கு சுதந்திரமில்லை. எனவே மக்கள் அனைவரும் இதற்கெதிராக ஓரணியில் திரளவேண்டும்.

எதிர்வரும் வாரத்தில் தேர்தல் முடிவுகளுக்கு எதிராகவும் வாக்குகளை மீள எண்ண வேண்டுமெனக் கோரியும் உயர் நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்யவுள்ளோம்.

இச்சவால்களை ஏற்றுக்கொள்ள முடியாத அரசாங்கம் பழிவாங்கல் படலத்தை ஆரம்பித்துள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

## சவுதி அரசு இலங்கைக்கு நிதியுதவி

இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு 5 ஆயிரத்து 332 மில்லியன் ரூபாவை சவுதி அரேபிய அரசு வழங்கியுள்ளது.

1981ஆம் ஆண்டிலிருந்து சவுதி அரேபிய அரசு இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்கி வருகின்றது.

இந்த உதவித் தொகை தொடர்பான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவிக்கின்றது. (2)

## மென்பந்து சுற்றுப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது

நாளை இடம்பெறவிருந்த இணுவில் பொது நூலக சனசமூக நிலையத்தின் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் என்று நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருந்த போட்டிகள் யாவும் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை இணுவில் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வரிசைப்படுத்தல் அட்டவணையைப்பெறாத அணிகள் இணுவில் பொதுநூலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# இலஞ்சம் பெற்றுக் கொண்ட சிறைச்சாலை அதிகாரி கைது

(கொழும்பு)

சிறைக்கைதிகளிடம் இலஞ்சம் பெற்றுக் கொண்ட சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறைச்சாலை அதிகாரி கடந்த சுதந்திர தினத்தின்போது மூன்று கைதிகளை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய இணக்கம் தெரிவித்து தலா 50 ஆயிரம் ரூபா இலட்சமாகப் பெற்றுக் கொண்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த நபர்களை விடுதலை செய்வதற்காக இந்த இலஞ்சத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் குறித்த சிறைச்சாலை அதிகாரி அனுராதபுரம் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இவரை கொழும்பு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு அனுராதபுர நீதவான் தர்ஷிக்கா விமலசிறி தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் அபராதப் பணத்தை செலுத்த தவறிய குறித்த மூன்று புதையல் திருட்டுடன் தொடர்புடைய நபர்கள் பொது மன்னிப்பு அடிப்படையில் சுதந்திர தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (2-6)

# மரபணு மூலம் பண்டைய கால மனிதரின் முகத் தோற்றம் கண்டுபிடிப்பு



மரபணுக்களின் மூலம் பண்டைய கால மனிதரின் முகத் தோற்றம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிறீன்லாந்தில் இருந்து மீட்கப்பட்ட பண்டைய கால மனிதனின் தலைமுடி மரபணுக்களைச் சோதனை செய்ததன் மூலம் இந்த புதிய தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

நேசர் என்ற விஞ்ஞான ஆய்வு சஞ்சிகையில் குறித்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

4000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த வயது வந்த ஆண்களின் தலைமயிர் கருமையாகக் காணப்பட்டதாகவும் தலையில் வழுக்கை விழுந்திருந்தாகவும் கபில நிற கண்கணைக் கொண்டிருந்ததாகவும் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

குறித்த நபரின் மரபணு கிறீன்லாந்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டபோதிலும் அவரது பூர்வீகம் சைபீரியாவாக இருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும் குளிர்கால நிலைகளுக்கு ஏற்ற வகையில் குறித்த நபரின் உடற்கட்டமைப்பு காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(2-6)

# வலி. வடக்கில் இடம்பெறும் திருட்டுக்களை தடுப்பது தொடர்பான கூட்டம்

வலி.வடக்கில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களைத் தடுப்பது தொடர்பான கூட்டம் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குத் தெல்லிப்பழை பிரதேச செயலக் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்கு மீள்குடியேற்றப் புனர்வாழ்வுக் குழுத் தலைவர் ஆ.சி.இ நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் பிரதேச செயலர் எஸ். முரளிதரனும் கலந்து கொள்ளவுள்ளார்.

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இங்குள்ள வீடுகளில் எஞ்சியுள்ள ஓடுகள், கதவுகள், கதவு நிலைகள், யன்னல்கள் மற்றும் மரங்கள் என்பனவும் ஆலயங்களிலுள்ள விக்கிரகங்கள், வாகனங்கள் போன்றவையும் நாளாந்தம் திருட்டுப் போகின்றன என்ற முறைப்பாடுகள் பிரதேச செயலருக்குக் கிடைத்து வருகின்றது.

இவ்விடயம் சம்பந்தமாக புனர்வாழ்வுக் குழு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து, திருட்டுச் சம்பவங்களைத் தடுப்பது தொடர்பான விடயங்களை ஆராயவுள்ளது. அத்துடன் மீள்குடியேற்றம் பற்றிய தற்போதைய நிலவரம் பற்றியும் அதற்கான எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் இங்கு ஆராயப்படவுள்ளன. எனவே, உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியேறவுள்ள அனைத்து மக்களை யும் இக்கூட்டத்திற்குத் தவறாது சமுகமளிக்குமாறு தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(2-6)

# மகளிர் தினப் போட்டிகள்

நல்லூர் பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் மகளிர் தினப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் பொது அறிவு , தேங்காய் உரித்தல், கோலமிடுதல், கண்கட்டி அலங்காரம்,கழிவு பொருள் ஆக்கம் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளான கயிறு இழுத்தல்,வேக நடை ,மெதுவான சைக்கிள் ஓட்டம், பலூன் உடைத்தல் , கரண்டியால் போத்தலில் நீர் நிரப்புதல் போன்றவை இடம்பெறவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் அல்லது மகளிர் விவகாரக் குழு அங்கத்தவராக இருப்பதுடன் ஒருவர் 3 போட்டிகளில் மாத்திரமே பங்கு பற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு போட்டிகளிலும் பங்கு பற்ற விரும்பும் போட்டியாளர்கள் தமது பெயர் விபரங்களை இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு முன்னதாக பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் அல்லது மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் கேட்டுக்கொள்கின்றார்.

(6-2-30)

## 8 வருடம் சேவை செய்த

# உதவி இன்ஸ்பெக்டர்கள் பதவி உயர்த்தப்படவுள்ளனர்

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தில் 8 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் சிறந்த சேவையைப் பூர்த்தி செய்த சகல உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாகப் பதவி உயர்வு பெறவுள்ளனர். இந்தப் பதவி உயர்வுக்கான பட்டியல்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2010 பெப்ரவரி 8ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் குறிப்பிட்ட அதிகாரிகள் பதவி உயர்த்தப்படுவதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-6)

# உலகக்கிண்ண கால்பந்தாட்டம் ரொனால்டீனோ விளையாடுவாரா?



(பிரேஸில்)

உலகின் முக்கிய கால்பந்தாட்ட நட்சத்திரங்களில் ஒருவராகக் கருதப்படும் பிரேஸிலின் ரொனால்டீனோ தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்ற முடியாத நிலை ஏற்படக் கூடுமென அறிவிக்கப்படுகிறது.

ரொனால்டீனோ உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத்திற்கான தேசிய குழாமில் இணைத்துக்கொள்ளப்படவில்லை.

கடந்த 2009ஆம் ஆண்டில் ரொனால்டீனோ பிரேஸிலில் அணிக் காக எந்தவொரு போட்டியிலும் பங்குபற்றவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் ரொனால்டீனோ, ரசிகர்கள் மற்றும் ஊடகங்கள் அவரை உலகக் கிண்ண குழாமில் இணைத்துக்கொள்ளுமாறு வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

29வயதான ரொனால்டீனோ ஏ.சீ.மிலான் கழகத்திற்காக விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2002ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டிகளின் போது பிரேஸில் அணி உலகக் கிண்ணத்தை வென்றெடுப்பதற்கு ரொனால்டீனோ வழங்கிய பங்களிப்பு மிகவும் முக்கியமானதென்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் சிறந்த கிரிக்கெட் அணி; 2010ஆம் ஆண்டு முதல் தெரிவு செய்யப்படும்

## யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டு கழகம் 2010ஆம் ஆண்டு முதல் சிறந்த விளையாட்டுக்கழக அணியை(BEST CLUB TEAM)ஆண்டு தோறும் தெரிவு செய்யத் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தெரிவிற்கான விதிமுறைகளையும், நடைமுறைகளையும் கழகம் வெளியிட்டுள்ளது.

இதில் நடைபெறுகின்ற துடுப்பாட்ட சுற்றுப் போட்டிகளை நாலு வகையாக பிரித்து புள்ளிகள் வழங்கப்படவுள்ளன. 20ஓவர்களைக் கொண்ட சுற்றுப் போட்டிக்கு 2புள்ளிகளும் 30ஓவர்களைக் கொண்ட சுற்றுப் போட்டிக்கு 3புள்ளிகளும் நாற்பது, ஐம்பது ஓவர்கள் கொண்ட சுற்றுப் போட்டிகளுக்கு முறையே 4,5 புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

ஒரு சுற்றுப் போட்டியில் நடைபெறும் அனைத்து ஆட்டங்களிலும் வெற்றி பெறும் ஒவ்வொரு அணிக்கும் மேற்கூறியவாறு புள்ளிகள் வழங்கப்படவுள்ளது. அத்துடன் யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் நடைபெறும் சுற்றுப் போட்டிகள் மட்டுமே கவனத்தில் எடுக்கப்படும்.

ஒரு அணியில் 11வீரர்கள் பங்கு பற்ற வேண்டும். அதற்கு குறைந்த தொகை வீரர்கள் பங்குபற்றும் போட்டிகள் புள்ளி வழங்கலில் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. 2009ஆம் ஆண்டு ஆரம்பமாகி 2010 ஆண்டு தொடரும், சுற்றுப் போட்டிகளும் புள்ளிகள் வழங்குவதில் கணிக்கப்பெறும்.

சிநேகபூர்வமான போட்டிகள் யாவும் இந்தக் கணிப்பீட்டில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அணி தெரிவின் பிரகாரம் பரிசில் கள் ஆண்டு முடிவில் சம்பந்தப்பட்ட கழகத்திற்கு வழங்கப்படவுள்ளது என யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகம் அறிவித்துள்ளது.

# பங்களாதேஷ் அணி போராடித் தோல்வி; நியூசிலாந்து தொடரை முழுமையாக ருசித்தது

குப்திலின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி தொடரை 3:0என்ற கணக்கில் கைப்பற்றியது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி ஒரே ஒரு இருபது-20 போட்டி, 3ஒரு நாள் போட்டிகள் மற்றும் 2டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20போட்டியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி தொடர்ந்து நடைபெற்ற முதலிரண்டு ஒருநாள் போட்டிகளிலும் வெற்றிபெற்று தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்நிலையில் மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நேற்று கிறிஸ்சேர்ச்சில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி ஹெய்ஸின் சிறப்பான சதத்தின் மூலம் 50ஓவர்களில் 9விக்கெட்டுக்களையிழந்து 241ஓட்டங்களை எடுத்தது.

இதில் இம்ரூல் ஹெய்ஸ் 138பந்துகளில் (11பவுண்டரிகள் உட்பட) 101 ஓட்டங்களையும், சகிப் அல்ஹசன் 36, அப்ராப் அகமெட் 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் கௌத்தி, அணித்தலைவர் டானியல் விக்டோரி ஆகியோர் தலா 3விக்கெட்டுக்களையும், மைக்கேய், ஓரம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி குப்திலின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 44.5ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 244ஓட்டங்களை எடுத்து 3விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் குப்தில் 91பந்துகளில் (9பவுண்டரிகள், 3சிக்ஸ்சர்கள்உட்பட)91 ஓட்டங்களையும் அணித்தலைவர் டானியல் விக்டோரி 34ஓட்டங்களையும் இங்ராம் 25ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் சகிப்அல்ஹசன் 4விக்கெட்டுக்களையும், ருபேல் ஹீசைன், நயீம் இஸ்லாம் மற்றும் மகமுடுல்லா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ்வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணி 3போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 3:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

இப்போட்டியில் நியூசிலாந்து அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த குப்தில் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## ஆளுங்கட்சியின்...

நாடாளுமன்ற தேர்தலில் ஈ.பி.டி.பி. தனித்தே போட்டியிடும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ள நிலையில் பொது ஜன ஐக்கிய முன்னணி தனது கரங்களைப் பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையிலேயே குடாநாட்டிலிருந்து நீதித்துறை, சட்டத்துறை மற்றும் சிவில் சமூக அமைப்புகளைச் சேர்ந்த 25 பேர் அவசர அவசரமாக அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் கொழும்புக்கு சென்றுள்ள நிலையில் நேற்றுக்காலை 10 மணியளவில் கூட்டம் ஆரம்பமானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இவர்களின் யார்? வேட் பாளர் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது பற்றிய தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (ந-5)

## யானைச் சின்னத்தில்...

தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் ஆராய நேற்று மாலை கூடிய கட்சியின் செயற்குழு இம் முடிபை எடுத்தது என கட்சியின் உறுப்பினர் கஜந்த கருணாதிலக தெரிவித்தார்.

கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து அன்னம் சின்னத்தில் போட்டியிட்ட பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆதரித்தன.

இந்நிலையில் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தனது பாரம்பரிய சின்னமான யானை சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக நேற்று அறிவித்துள்ளது.

இதனால் அன்னம் சின்னத்தில் போட்டியிடுகின்றபோது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதாக இருந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.), மங்கள சமரவீர தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு என்பன ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவை பொதுத் தேர்தலில் வழங்காது என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## மூன்று ஆண்டுகளில் வடக்கு...

வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பிற்பகல் விஷேட ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினார்.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த மத்திய வங்கி ஆளுநர் கூறியதாவது,

வடபகுதியின் அபிவிருத்தியை விரைவாக மேற்கொள்ளும் பொருட்டு அரசாங்கம் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக வடக்கு மாகாண புனர்நிர்மாண /அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அடுத்த 3 ஆண்டு காலப் பகுதிக்கு 295 பில்லியன் ரூபாய் (2.7பில்லியன் அமெரிக்க டொலர்கள்) நிதியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது.

இதில் வீதிகள் போக்குவரத்து உட்கட்டமைப்புகளின் புனர்நிர்மாணம், வீடுகள் கைத் தொழில்களுக்கான மின்சாரம், நீர் வழங்கல், விவசாயம், மீன்பிடி, கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசன உட்கட்டமைப்பு மற்றும் தயாரிப்பு கட்டமைப்பு போன்றவற்றின் தரங்கள் மேம்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் வடக்கில் இடம் பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தும் பணிக்கு அரசு முன்னுரிமை வழங்கியுள்ளது.

இதனை மேற்கொள்வதற்கு வன்னிப் பகுதியில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணி வெடிகளை அகற்றும் பணி சிரமமாகவுள்ளது. இதுவரை ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட கண்ணிவெடிகள் அங்கு அகற்றப்பட்டுள்ளன.

ஏனையவையும் அகற்றப்பட்டதும் மீதமாகவுள்ள மக்களும் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள்.

**வடக்கில் புதிதாக 90 வங்கிக்கிளைகள்**

வடக்கின் அபிவிருத்திப்பணிகளில் மத்திய வங்கியும் சிறிதளவு பங்களிப்பொன்றினை வழங்கியுள்ளது. கடந்த 8 மாதங்களில் வடபகுதியில் 90க்கும் மேற்பட்ட வங்கிக்கிளைகள் நிறுவுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளோம்.

அத்துடன் வடமாகாண மக்களின் வாழ்வாதார அபிவிருத்திகளுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் வடக்கின் வசந்தம் என்ற திட்டத்தின் மூலம் சிறப்பு கடன்வழங்கல் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இத்திட்டத்தின் கீழ் வங்கிகள் ஊடாக தகுதி வாய்ந்த நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு 9 சதவீதமான சலுகை வட்டி வீதத்தில் மொத்த கடன்திட்டங்களின் கீழ் ஆரம்பத்தில் மூவாயிரம் மில்லியன் ரூபாய் கொண்ட தொகையினை பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இக் கடன்திட்டத்தின் பயனாளிகளுக்கு மீள் கொடுப்பனவு காலம் 6 மாத சலுகை காலத்துடன் 5 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட் டிருக்கின்றது.

இத்திட்டத்தில் ஏற்கனவே 1.8 பில்லியன் ரூபாய் தொகையில் சுமார் 9 ஆயிரம் பேருக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் ஒரு பில்லியன் ரூபாய் கடன்வழங்கல் வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றது.

காடுகள், விவசாய நிலங்கள், சதுப்பு நிலங்கள், கடல் நீரேரிகள் மற்றும் குடாக் கடல் என்பவற்றை உள்ளடக்கும் வடமாகாணத்தின் வளமிக்க மூல வளங்கள் பல்வேறு தொழில் முயற்சிகளுக்கும் உறுதியான தளம் ஒன்றினை வழங்குகின்றது.

போர்க்கால சூழலிலும் கூட 10 சதவீதமான நெல் உற்பத்தியினை வடபகுதி விவசாயிகள் விளைவித்திருக்கின்றனர். அத்துடன் 40 சதவீதமான வெங்காயத்தினை யும் 10 சதவீதமான மிளகாயினையும் 14 சதவீதமான பயறினையும் 25 சதவீதமான நிலக்கடலையையும் உற்பத்தி செய்திருக்கிறார்கள்

வடமாகாணத்தில் 219 மீன்பிடி கிராமங்களில் ஒரு இலட்சத்து 29 ஆயிரம் கடற்றொழிலாளர்கள் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இது நாட்டின் மொத்த கடற்றொழிலாளர்களில் 20 சதவீதமாகும்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் மொத்த மீன் உற்பத்தி 25 ஆயிரத்து 900 மெற்றிக் தொன்னாக இருந்து, 2006ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த மீன் பிடியில் 12 சதவீதத்தினை கொண்டிருந்தது என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். (ந-5)

## பிரபாகரனின் மரணச் சான்றிதழை...

மத்திய அரசும் இது தொடர்பான கோரிக்கை வைத்தது.

இருப்பினும் இதுவரை இறப்புச் சான்றிதழை இலங்கை வழங்கவில்லை. மாறாக மரணத்தை உறுதிப்படுத்தும் சான்றுகளை மட்டுமே இந்தியாவிடம் வழங்கியுள்ளது.

ஆனால் இந்திய கோர்ட்களில் மரணச் சான்றிதழை சமர்பித்தால்தான் ஒருவர் மீதான வழக்கை மூட முடியும். இதனால் ராஜீவ் காந்தி கொலை வழக்கில்; பிரபாகரன், பொட்டு அம்மான் மீதான வழக்குகளை மூட முடியாத நிலை உள்ளது.

இந்நிலையில் சமீபத்தில் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் சி.பி.ஐயிடம் பிரபாகரனின் மரணச்சான்றிதழ் கிடைத்துவிட்டதா என்று கேட்டதற்கு இல்லை என்று சி.பி.ஐ. பதிலளித்தது.

ஆனால் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் டில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், .பிரபாகரனின் மரணத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை இலங்கை சி.பி.ஐயிடம் வழங்கியுள்ளதாக கூறினார்.

இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்பு சி.பி.ஐ. இயக்குநர் அஸ்வினி குமார் கூறுகையில், பிரபாகரனின் மரணச்சான்றிதழ் இதுவரை வரவில்லை என்றார். இதனால் குழப்பம் மேலும் வலுவடைந்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் மரணச்சான்றிதலுக்கு சமமான கடிதத்தை இந்தியாவிடம் கொடுத்துள்ளதாக இலங்கைத் தூதர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், இலங்கை நீதிமன்றத்தால் பிரபாகரனின் மரணத்தை உறுதிப்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட கடிதத்தை இலங்கை அரசு வழங்கிவிட்டது.

பிரபாகரனின் மரணம் தொடர்பான ஆவணங்களை இந்தியாவிடம் வழங்குவதற்கு பல்வேறு சட்ட நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டியுள்ளது. அவரது மரணச்சான்றிதழை வழங்குவதற்கு பல நடைமுறைகளும், கால அவகாசமும் தேவைப்படும். எனவே தான், அதற்கு சமமான நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட பூர்வ ஆவணத்தை இந்தியாவிடம் வழங்கியுள்ளோம் என்றார். (ந-5)

## வீதியால் நடந்து சென்றவர் கீழே விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதியால்நடந்துசென்றகுடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக கீழே விழுந்து உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை இணுவிலில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இணுவில் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சதாசிவம் தில்லைநாதன் (வயது 57) என்பவரே உயிரிழந்தவராவார். (ந-14)

## மோட்டார் சைக்...

இதில் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை சேர்ந்த சிவானந்தன் நதீஸ் (வயது 24) என் பவரே உயிரிழந்துள்ளார்.

கொக்குவில் கிழக்கு காளி கோவிலடியை சேர்ந்த உதயகுமார் ரவி சாந்த் (வயது 21) என்ற இளைஞனே படுகாயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் மரணமடைந்த இளைஞன் நண்பரின் வீட்டுக்கு செல்வதாகக் கூறி தனது தந்தையின் மோட்டார் சைக்கிளை எடுத்து சென்ற வேளை இத்துயரச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ந-14)

## வன்னிப் போர்க்குற்றம்...

மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனை தடுக்கும் நோக்கிலேயே மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான குழு ஜெனீவா சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொளி மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வர்களின் நேரடி சாட்சியங்களின் அடிப்படையில் இந்த விசாரணை நடைபெறவுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்த விசாரணையின் போது இலங்கை அரசாங்கம் போர்க்குற்றங்களில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டால் பாரிய அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விசாரணையில் சாட்சியமளிப்பதற்கு முன்னாள் இராணுத் தளபதி சரத் பொன்சேகா இணங்கியிருந்தார் என்றும் தெரிய வந்துள்ளது.

சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இறுதி யுத்தத்தில் பங்கெடுத்த வேறு இராணுவ அதிகாரிகளை இந்த விசாரணையின் போது பயன்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை முனைப்புக் காட்டி வருவதாக வும் குறிப்பிடப்பட் டுள்ளது. (ந-5)

## எனது கணவரின் பாது...

இந்நிலையில் ஜெனரல் சரத் பொன்சேகா வின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டின்போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

எனது கணவரை பார்க்கச்சென்ற போது நான் மிகுந்த கவலை அடைந்தேன் வெளி உலகம் தெரியாதவாறு ஓர் அறைக்குள் இருந்தார்.

இப்படியானதொரு தண்டனை கிடைப்பதற்கு எந்த தவறையும் அவர் செய்ய வில்லை.

அவர் தவறு செய்ததாக குறிப்பிடுவார் களே ஆனால் அதற்கு நானும் உடந்தை என என்னையும் கைது செய்து அழைத்துச்செல்ல வேண்டும்.

இராணுவத்தின் வெற்றி வீரர் ஒருவருக்கு அரசாங்கம் கொடுத்துள்ள உரிய பரிசு இதுதானா?

எனது கணவர் இராணுவத்தில் இருக்கும்போது எந்தவொரு காரணங்களுக்காகவும் அரசியல் வாதிகளுடன் தொடர்பு வைத்திருக்க வில்லை. நாட்டின் நலன்கருது அரசியலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்காக இவ்வாறு நடத்தப்படுவது அநீதியானது என்றார். (ந-5)

## கோத்தபாயவின் குற்றச்...

தலையீடு செய்ததில்லை. செய்யப் போவதும் இல்லை. இந்த விவகாரம் தொடர்பில் இலங்கைக்கான நோர்வே தூதுவர் டோரி ஹாட்ரோம், இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை எதிர்க்கட்சி வேட்பாளருக்கு பண உதவி அளித்ததாக பாதுகாப்பு செயலாளர் வெளியிட்டுள்ள கருத்து ஏற்றுக் கொள்ள முடியாதென அமெரிக்கா ஊடக அறிக்கை ஒன்றின்மூலம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இந்த குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது. எந்தவொரு வேட்பாளரையும் தாங்கள் ஆதரிக்கவில்லை எனவும், இலங்கையில் சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே தமது நாட்டின் விருப்பமாக காணப்பட்டதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எதிர்க் கட்சி வேட்பாளருக்கு ஆதரவளித்த நபர்களை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமெரிக்கா மேலும் கோரிக்கை விடுத்துள்ளது. (ந-5)

## அமெரிக்கா, நோர்வே...

இது தொடர்பில் சிங்கப்பூர் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இராணுவ நீதிமன்றம் மூலம் உடனடியான விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு பொன்சேகாவுக்கு 5 வருடகால சிறைத்தண்டனைவிதிக்கப்படும்.

பொன்சேகா விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் சிறப்பாக பணியாற்றியவர் என்பது போலியானது. நாம் அதனை வேறு தளபதிகளை வைத்தும் மேற்கொண்டிருப்போம் அவரைவிட சிறந்த தளபதிகள் எம்மிடம் உள்ளனர்.

இராணுவத்தில் இருந்து விலகியவரை 6 மாதங்களுக்குள் இராணுவ நீதிமன்றத்தின் மூலம் தண்டிக்க முடியும். அவருக்கு எதிரான ஆதாரங்கள் ஒழுங்கு படுத்தப்பட்டதும் இராணுவ நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பமாகும்.

அது எவ்வளவு காலம் எடுக்கும் என நான் கூற முடியாது. அது சட்டவாளர்களின் கைகளில் தங்கியுள்ளது. ஆனால் அதனை விரைவில் முடிக்க நாம் விரும்புகிறோம். 6 மாதங்களுக்குள் அதனை நிறைவு செய்ய எண்ணியுள்ளோம்.

அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் வலுவானவை எனவே அவர் 5 வருட சிறைத் தண்டனையை எதிர் கொள்ளலாம். பொன்சேகா இராணுவத்தின் பிரதம அதிகாரியாக இருந்த போது அரசியல் வாதிகளின் தொடர்புகளை கொண்டிருந்தார். பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் அவர் அவ்வாறு செய்யமுடியாது.

அவர் இராணுவ ஆட்சிக்கு திட்டமிட்டிருந்தார் அரசியல் வழிமுறைகளை விடுத்து நாட்டை வேறுபாதையில் கொண்டு செல்ல முற்பட்டிருந்த இராணுவத்தில் தனக்கு நெருக்கமானவர்களையும் தனது றெஜிமன் படையினரையும் கொழும்புக்குக் கொண்டுவந்த பொன்சேகா அவர்களை முக்கிய இடங்களில் நிறுத்தியிருந்தார். இது ஒரு இராணுவப்புரட்சிக்கான திட்டம்.

பொன்சேகாவை மேற்குலக நாடுகளே வழிநடத்தியுள்ளன என்பதை நாம் நூறு வீதம் நம்புகின்றோம். அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகள் அவருக்கு அதிகளவு நிதி உதவிகளை வழங்கியுள்ளன.

அரசுக்கு எதிராக எழுதும் ஊடகங்களுக்கு நோர்வே அரசு நிதியுதவிகளை வழங்கியதற்கான ஆதாரங்கள் என்னிடமுண்டு. அவர்கள் விடுதலைப்புலிகளையும் பயன் படுத்தியிருந்தனர். அவர்களும் பொன்சேகாவுக்கு ஆதரவுகளை வழங்கியிருந்தனர்.

ஊடகவியாலாளர் மீதான படுகொலைகள் மற்றும் கடத்தல்கள் உடன் பொன்சேகாவுக்கு தொடர்புகள் உண்டு. அவை விரைவில் வெளிவரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)



BIT University of Colombo
Call Today-772395895
Bachelor of Information Technology (UCSC)
Want to Qualify in IT?
3 Pass A' Levels? → Register for BIT
No Pass A' Levels? → Foundation in Information Technology
BIT மாணவர்களுக்கு மேலதிக கட்டணம் இன்றி
BCS, Computer Engineer(USA), ICDL
தகைமைகள்
MCS 324,Palaly Road,Parameswara Junction
Web site : Http://www.mcsitcampus.org
(C-4430)

பயிற்சிகள்
❖ Mobile Phone Repairing
❖ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிப்
❖ ஏயர் கொண்டிசனிங்
மீண்டும் ஆரம்பம்:-14.02.2010- 9. 30 a.m
விபரங்களிற்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P.:6434, 071 8561654
குறிப்பு:- மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகளிற்கு செல்பவர்களிற்கு குறைந்த காலத்தில் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
(C-4418)



## 54ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## நாகலிங்கம் குருசாமி

(ஓய்வு பெற்ற மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்)

மலர்வு 09-04-1934 — உதிர்வு 21-12-2009



எமதருமை ஐயாவே
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
அன்புடன் அறிவுரைகள் பல சொல்லி
பாரினில் உயர்ந்து வாழ வழிகாட்டிய
எங்கள் அன்பு ஐயாவே!
உங்கள் கடமை முடிந்ததென்று எங்கள்
குலதெய்வமாம் பத்திரகாளியிடம்
நீங்கள் சென்று விட்டீர்களோ ஐயா!
ஐயா என்ற சொல்லுக்கு நாம்
அநாதைகள் ஆகிவிட்டோம்-உங்கள்
நினைவுகளை எம் நெஞ்சில்
சுமந்தபடி வாழ்ந்திடுவோம்...

உங்கள் ஆத்மா சாந்தி அடைய தினம் தினம் ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

எமது ஐயாவின் மரணச்செய்தி அறிந்து ஓடோடிவந்து உதவிகள் பலபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதங்கள் ஊடாக அனுதாபங்களை எம்மோடு பகிர்ந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

நவாலி வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(410)

## மரண அறிவித்தல்

## செல்லையா வரதராஜா

(இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர் யாழ்/மாநகரசபை)



அரசவிதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், இராஜவிதி, நல்லூரை வசிப்பிடமாகவும் தற்போது ஸ்காபரோ கனடாவில் வசித்தவருமான செல்லையா வரதராஜா அவர்கள் 07.02. 2010ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார். அன்னார் செல்லையா (சட்டம்பியார்), தங்கமுத்து தம்பதியின் அன்பு மகனும், சிவசாமி (பிரபல ஆயுர்வேத வைத்தியர்), பொன்னம்மா தம்பதியின் அன்பு மருமகனும், மனோன்மணி (கனடா-இளைப்பாறிய ஆசிரியை யா/செங்குந்த இ.க.,யா/ நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), கனடாவில் வசிக்கும் கலாராணி, பார்த்தீபன், கலாமதி, கிரிதரன், ரவிச்சந்திரன், சிறீதரன், விஜிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

கனடாவில் வசிக்கும் அசோகன், சசிகலா, லோகநாதன், விஜயலட்சுமி, சிறீவதனி, சசிகலா, யாழ்ப்பாணம் சிவநிருபன், சிவபிறீமி, அபிசங்கர், ஆரையம்பதி செல்வகுமார், முள்ளியவளை பாமினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,

குருபரன், அனபாயன், அகல்யா, சத்தியா, அருண்மொழி ( நரம்பியல் மருத்துவ பீடமாணவன் றொரன்ரோ பல்கலைக்கழகம்), றோபேட், அபிராமி, அபிநயா, அபிவர்ணி, லக்ஸ்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும்,

பஞ்சலிங்கம் (ஆரையம்பதி), அமரர் விஜயலட்சுமி, ரஞ்சிதபூசணி (முள்ளியவளை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், புவனேஸ்வரி (கொழும்பு), இராஜேஸ்வரி (நீர்கொழும்பு), அமிர்தலிங்கம் (இளைப்பாறிய சிவில் மின்மேற்பார்வையாளர் வ.பி.போ.ச.வடக்கு), பரராஜசிங்கம் (இ.மி.சபை யாழ்.), தனராணி (போதனா வைத்தியசாலை யாழ்.), அனுராதா, கமலவல்லி (ஆரையம்பதி), குமாரசாமி (ஓட்டுத் தொழிற்சாலை, முள்ளியவளை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வல்லிபுரம் (ஆயுர்வேத வைத்தியர்), வாமதேவன் (இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட்) ஆகியோரின் அன்பு சகலனும், பாஸ்கரன் (லண்டன்), சுதாகரன் (ஜேர்மனி), சகீலா (ஜேர்மனி), றோகிணி (கனடா), விமலன் (லண்டன்), அகிலன் (நீர்கொழும்பு), கார்த்திகா, லக்ஸ்மன் (ஆரையம்பதி) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வியாழன், வெள்ளி மாலை 5.00 மணி-9.00 மணிவரை றொரன்ரோ HIGH LAND FUNARAL HOME-ல் பார்வைக்காக வைக்கப்பட்டு 13.02.2010ஆம் திகதி சனிக்கிழமை பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.31, இராஜவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P: 021 2226616, 021 2226555
கனடா: 416-287-2048
Fax: கனடா- 416-499-2758

தகவல்:
சி.அமிர்தலிங்கம்
சி.பரராஜசிங்கம்
(மைத்துனர்கள்)

(403)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12 .02. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.